# வெற்றிமணி

பொங்கல் மலர்



15-1-69 ஒரு ரூபா

# BEAUTY HOUSE

6, Green Road, **NEGOMBO.**

Dealers in:

- All Varieties of Foot - Wear
- Scents
- Face Powder Etc.

SANDALS & FOOT – WEARS
of
LATEST DESIGN & STYLE.

---

உங்களுக்குத் தேவையான:

- **எல்லாவகையான அழகுசாதனப் பொருட்கள்**
- **செருப்பு**
- **சப்பாத்து வகைகள்**
- **சூட்கேஸ்**
- **சுகந்த வாசனைத் திரவியங்கள்**

சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

# பியூட்டி ஹவுஸ்

**6, கிறீன் வீதி,**

**நீர்கொழும்பு.**



கௌரவ ஆசிரியர்: மு. க. சுப்பிரமணியம்

# வெற்றிமணி

## வருடச் சந்தா

பொங்கல் மலர்
தபாற்செலவுட்பட

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா. | 4-00 |
| இந்தியா | ரூபா. | 4-00 |
| மலாயா | $ | 4-00 |

★

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| வெளி அட்டை | ரூபா. | 50-00 |
| உள் அட்டை | ரூபா. | 35-00 |
| முதற் பக்கம் | ரூபா. | 30-00 |
| உட் பக்கம் | ரூபா. | 20-00 |

தொடர்ந்து விளம்பரஞ் செய்யின்
15 வீதக் கழிவுண்டு

விபரங்களுக்கு எழுதுக.

## பொருளடக்கம்


தலையங்கம் ... ... ... ...
நளன் வள்ளன்மை ... ... 1
அணிகளின் அடிப்படைத் தலைய. 5
இலங்கையின் மீன்பிடித் தொழி. 9
தேர்ணி — ஒரு பார்வை ... 13
தாஜ்மஹல் ... ... ... ... 17
சேனை வேளாண்மை ... ... 21
அறிவுப்போட்டி விபரம் ... ... 25
இன்சுலின் மருந்துக்கண்ட டாக்டர் 26
முதலாளியும் தொழிலாளியும் 29
அன்புத்தமிழரின் இன்பத்திரு. 32
இலங்கையும் உணவு நெருக்கடி 35
போஷாக்குக் குறைவு ... ... 37
ஆறுமுக நாவலர் ... ... ... 39
சமூக சேவை ... ... ... ... 40
பேனா நண்பனின் கடிதம் ... 43
செந்தமிழ் கேட்ட தேவர்கள் .. 47
கொல்லேறு தழுவும் நல்விழா 49
பாலைவன நிலவு ... ... ... 53
கவிதை அரங்கம் ... ... ... 56
நலமா? ... ... ... ... ... 59
உங்கள் அறிவுக்கு! ... ... 62

# — வெற்றிமணி —

வெற்றிமணி டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள்மொழி நலமுற ஒலித்திடுவாய்

மலர் 6. | புதன்கிழமை 15-1-69 | இதழ் 9


## நமது பாதை

குறுக்கெழுத்துப் போட்டிகள் மலிந்த காலம் அது. விடைகளைத் தேடிப் பிடிக்க அகராதிகளைப் புரட்டி அவதிப்பட்டோர் பலர். இவர்களுக்கு உதவிபுரியும் வகையில் 1-12-54ல் ஆறு பக்கங்களுடன் தினகரன், சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டிகளின் விமர்சனமாக வெற்றிமணி வெளிவந்தது. வெற்றிமணி விமர்சனத்தைப் பின்பற்றிப் பலர் பரிசில்களைப் பெற்றுக்கொண்டனர். 25-3-55ல் வெற்றிமணியில் மாணவர் மன்றம் என்ற பகுதி ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து விமர்சனங்களுடன் மாணவர்களுக்கேற்றவிஷயங்களும் வெளியிடப்பட்டன. சில கஷ்டங்களால் இடையிடையே வெற்றிமணி தடைப்பட்டபோதிலும் திரும்பவும் 1968 தை முதல் சக்தி அச்சகப் பொறுப்பில் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கின்றது.

மாணவர்களை எழுத்துலகிற் பிரவேசிக்கச் செய்வதும், பகிரங்க பரீட்சையில் சித்தியடையச் செய்வதும், சிறு வயதிலிருந்தே ஒழுக்க சீலராகவாழக் கற்றுக் கொள்ளச் செய்வதுமே வெற்றிமணியின் நோக்கங்களாகும். இவற்றை நிறைவேற்றும் பொருட்டு ஆசிரியர்களும் மாணவர்களும், அறிஞர்களும், அளிக்கும் ஆதரவு அளப்பரியது. அவர்களுக்கு எமது நன்றி என்றும் உரித்தாகுக! வருகின்ற இதழ் தொடக்கம் சிறுவர்களுக்கேற்ற பல புதிய அம்சங்களையும் சேர்த்துக்கொள்ள விரும்புகின்றோம் என்பதை நேயர்களுக்கு அறியத் தருகின்றோம்.

இம்மலருக்கு கதை, கட்டுரை, கவிதை முதலியவற்றை எழுதி உதவிய அறிஞர் பெருமக்களுக்கும், விளம்பரங்கள் தந்துதவிய ஸ்தாபனங்களுக்கும், மலரை அழகுறச் செய்யும் முகப்பு ஓவியத்தை வரைந்து உதவிய கலாகேசரி திரு. ஆ. தம்பித்துரை அவர்களுக்கும் எமது நன்றி!

**வெற்றிமணி நேயர்களுக்கு**
**எமது பொங்கல் வாழ்த்துக்கள்!**

ஆசிரியர்

# செயின்ற் பீட்டர்ஸ் ஓடுகள்

அரசாங்க வேலைப் பகுதியினரால்
அத்தாட்சிப்படுத்தப்பட்டது

மற்றும் உங்களுக்குத் தேவையான

* கட்டிடச் சாமான்களும்
* கதவுப் பூட்டுப் பிணைச்சல் வகைகளும்

திறமான சாமான்களாகக் கிடைக்குமிடம்

# கதிர் ஹாட் வெயர்ஸ்

11/1, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7130

# நளன் வள்ளன்மை

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

தருமபுத்திரர்

''சூதுகொண்டு பொருதழிந்து தோல்வி யெய்த வேண்டுமோ
... ... ... ... ... ... ... ... ... ... ... ...
ஏதுகொண்டது அது நுமக்கு அளிப்பன்''

என்கின்றனர்.

கன்னன்

''போது போகு மாறிருந்து பொருதும் வருதி யென்னவுஞ்
சூது போரு மஞ்சியே தொலைந் துளந் துளங்குவாய்
மோது போரில் எங்ஙன் உய்தி''

என்று தருமரை நிந்திக்கின்றான். சகுனி துரியோதனுதிகள் சிரிக்கின்றார்கள்.

அருச்சுனன்

''இல்லெடுத்து விரகினேடும் எமையழைத்து மாயைசூர்
வல் லெடுத்து வருதலான் மறுத்தனன் மகீபனுஞ்
சொல்லெடுத்து வைதவாய் துணிப்பன் என்று கன்னன்மேல்
வில் லெடுத்தனள் ... ... ...''

தருமர் பழிக்கப்படுபவைகளில் ஒன்முன சூதாடுதலை மறுத்தால், அது, அவர் எடுத்த வாய்மை, பொறுமை முதலிய தவ ஒழுக்கங்களுக்கு இழுக்கஞ் செய்ததாகாது.

தருமருக்குப் போலச் சூதாடுதலை மறுப்பதொரு சந்தர்ப்பம், நளனுக்கு, அவன் வாழ்க்கையில் வரவில்லை; வர முடியாமையினுலே வரவில்லை.

நளனைச் சூதாட வருக என்று, இந்த நிலவுலகில் யாராயினும் ஒருவர் கேட்கவில்லை; கேட்க முடியாமையினுலே கேட்கவில்லை.

ஒருநாள் கலிபுருஷனுடைய தூண்டுதலினுலே புட்கரன் என்பவன், ஒரு கொடியை மேல் எடுத்துக்கொண்டு, எருது ஒன்றில் ஏறி, நளனை நோக்கி வருகின்முன். நளன் புட்கரனை எதிர்கொண்டு இன்முகஞ்செய்து இன்சொற் சொல்லுவானுய்ப் புட்கரனே நீ,

---

வல் - சூதாடு கருவி

× ''எடுத்த கொடி என்ன கொடி என்ன''
''மிடற்சூது வெல்லுங் கொடி''

என்கின்றான் புட்கரன். புட்கரன் சொல்லியது அவ்வளவே. அவன் சொல்லியது சொல்லி வாய் மூடமுன்னமே, நளன்,

''ஏன்றேம் இதுவாயின் ... ... ...
... ... ... ... ... ... ... ...
சூதாட என்றான் ... ...'' ||

புட்கரன் எடுத்த கொடியின் கருத்தை அறிந்த அந்தக் கணமே, புட்கரன் விரும்பியதை அவன் வாய் சோர்ந்து வாடமுன்னமே, நளன் நல்கினான்.

''கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்று
இரப்புமோர் ஏர் உடைத்து''

புட்கரன் நளனை இரக்கவில்லை. அவன் இரக்காமலே, குறிப்பறிந்து நல்கினான் நளன். அது அவன் வள்ளன்மை. நளன்போல்வார் முன்னின்று, ''இரத்தலும் ஈதலே போலும்.''

முல்லைக்கொடி ஒன்றுக்குத் தேரை உதவினான் ஒருவன்; அவன் கடைவள்ளல் பாரி.

ஆவியோ நிலையிற் கலங்குகின்றது. அந்தச் சமயத்திலும் ''யான்செய் புண்ணியம் அனைத்தும் உதவினேன்'' என்றான் ஒருவன்; அவன் இடைவள்ளல் கன்னன்.

நளன் முதல்வள்ளல். புட்கரனென் றொருவன், தான் விரும்பிய தொன்றைக் கேளாமலே, கொடி எடுத்து நிற்க, அவன் விரும்பியதைக் குறிப்பறிந்து நல்குவது முதல் வள்ளலுக்கு ஒரு காரியம் அன்று.

---

ஏன்றல் - ஏற்றுக்கோடல்

× ''அடற்கதிர்வேல் மன்னன் அவனேற்றின் முன்போய்
எடுத்தகொடி என்னகொடி என்ன — மிடற்சூது
வெல்லுங் கொடியென்றான் வெங்கலியால் அங்கவன்மேல்
செல்லுங் கொடியோன் தெரிந்து''

|| ''ஏன்றேம் இதுவாயின் மெய்ம்மையே யெம்மோடு
வான்றோய் மடற்றெங்கின் வான்றேறல் — தான்தேக்கி
மீதாடி வாளைவயல் வீழ்ந்துழக்கு நன்னாடன்
சூதாட என்றான் துணிந்து''

புருஷார்த்தங்களில் அர்த்தம் இரண்டாவது. வள்ளல்கள் தருமங் கைவந்தவர்கள்; அடுத்தபடியான அர்த்த சாதகர்கள்; அர்த்தம் - பொருள். நிலையாத பொருள் கொண்டு நிலையாயது சாதிப்பவர்கள் அவர்கள். அர்த்த சாதகர்களாகிய வள்ளல்களுக்கு, இடறுகட்டைகளாய் அவர்களை எதிர்ப்பவைகள் லோப மோகங்கள். இந்த லோப மோகங்கள், காமக் குரோதாதி. அறுவகைப் பகையைச் சேர்ந்தவைகள். லோப மோகங்களை வெல்லுவதே வள்ளல்களின் சாதனம். ஒளியின் ஒளிவுநோக்கி நிற்கும் இருள்போல, வள்ளல்களை வெல்லுதற்குப் பொல்லாத சந்தர்ப்பங்களை நோக்கித் தவங்கிடப்பவைகள் இந்த லோப மோகங்கள்.

அன்னந் தூதுநடந்து அமைகின்றது. நளதமயந்தியரின் காதல் கரைபுரளுகின்றது. நளனுடைய ஒவ்வொரு உரோமத் துவாரத்திலும் தமயந்தி கொலு வீற்றிருக்கின்றாள். நளன் சுயம்வர மண்டபத்தை நோக்கி நடக்கின்றான். இடைவழியில் இந்திராதி தேவர்கள் நளனுக்கு ஏவல் கற்பிக்கின்றார்கள். ஏவலை முகம்மலர்ந்து அகம் இனியனாய் ஏற்றுகொள்கின்றான் நளன். அவன் இருதயத்தில் களங்கத்தின் எதிர்மறையான தூய்மை குடிகொள்ளுகின்றது. அதனாலே அவன் இருதயம் பளிங்கை வெல்லுகின்றது. அந்த இருதயப் பளிங்கிற் குடியிருந்த கோதை x கோதாயினாள். உள்ளீடற்ற கழிவுபொருள் கழிவதுபோல இருதயத்திற் குடியிருந்த பொருள் விலகி மறைகின்றது. அப்படியொரு பொருள் ஒருகாலத்திற் குடியிருந்தது என்று அறிந்துகொள்ள இயலாத பிரகாரம், இருதயப் பளிங்கு வில்லிட்டு வென்று, வள்ளன்மை பிரகாசிக்கின்றது. சுயம்வர மண்டபம் நோக்கி நடந்த எத்தனையோ தமயந்திகளை உரோமத் துவாரந்தோறுஞ் சுமந்துசென்ற நளன்—நளமகாராஜன், இப்பொழுது தன்னந்தனியனாய், தமயந்தி வசிக்கும் அந்தப்புரம் நோக்கி, ஆரும் அறியாமல் நடக்கின்றான். நளன் தூது நடக்கின்றான். உள்ளும்

x ''செங்கண் மதயானை தேர்வேந்தே தேமாலை
எங்களிலே சூட்ட இயல் வீமன் — மங்கைபால்
தூதாக என்றானத் தோகைத்தன் ஆகத்தாற்
கோதாக வென்றான் கோ''

புறம்பும் நளர்களேயாக, பார்க்குமிடம் எங்கும் நளர்களையே பார்த்து, நளர்களோடேயே சல்லாபஞ்செய்து, ஒருகணம் ஒரு உகம் ஆகக் காலவெள்ளத்துள் கரைதுறை காணுமல் கலங்கியிருக்கின்ருள் தமயந்தி. அவள் எதிரில் மாசுநீங்கிய புதியதொரு தேஜஸ் பிரகாசிக்கின்றது. பழைய நளர்களைக் காணும். தமயந்தியின் இருதயப் பளிங்கும் வெறுமையாகின்றது. நளனுடைய தெய்வீக ஒளி அந்தப் பளிங்கையும் பரிசுத்தம் செய்கின்றதுபோலும். சந்தன மரத்துக்கு எதிரில் நிற்கும் மரமுஞ் சந்தன மரந் தானே. மாசு மறுஅற்ற தூய இருதயங்கள் இரண்டு பேசத் தொடங்குகின்றன.

நளன் பேசுகின்ருன்; மணம் பேசுகின்ருன்.

> ''என்னுரையை யாதென்றிகழா திமையவர்வாழ்
> பொன்னுலகங் காக்கும் புரவலனை — மென்மாலை
> சூட்டுவா யென்ருன் றுடையிற்றேன் தும்பிக்கே
> ஊட்டுவா னெல்லாம் உரைத்து''

இது நளன் பேசிய திருமணப் பேச்சு. எதிர்ப் பேச்சுப் பேசத் தமயந்திக்கு நா எழவில்லை. வள்ளன்மையாகிய தெய்வீக ஒளியின்முன், காதல் முளை சூனியம் ஆயினது போலும்.

''யாவையுஞ் சத்தெதிர் சூனியம்'' என்கின்றது சிவ ஞானபோதம்.

நளன் தூது முற்றி மீளுகின்ருன். மீளுகிறபோதுதான் தமயந்தியின் நாவில் ஒருவார்த்தை வருகின்றது.

''அவையத்தே — சோதிச் செழுந்தரள வெண்குடையாய் தேவர்களும் நீயும் எழுந்தருள்க என்ருள் எடுத்து.''

இதுதான் தமயந்திக்கு அந்தச் சமயத்தில் வரக்கூடியதா யிருந்த வார்த்தை.

நளன் தூது நாடகம் முடிவுற்றறு. இந்திராதி தேவர்கள் ஆசீர்வதிக்கின்ருர்கள், வள்ளன்மை வாகை சூடியது.

காதலையுமா வழங்கினுன் ஒரு வள்ளல் என்று, வாயூறுகின்றது உலக அரங்கு.

# அணிகளின் அடிப்படைத் தலையணி உவமை

பண்டிதர் செந்தமிழ்மணி பொன். கிருஷ்ணபிள்ளை

## கற்றோர் மற்றோர் பேச்சில் வரும் உவமை :

இந்த நல் உலகிலே எந்தக் கடினமான விஷயத்தையும் விளக்கிச் சுவைபடச் சொல்லுவதற்கு உவமையணி தலைசிறந்து விளங்குகின்றது. பெரும்பாலான அணிகள் எல்லாம் இந்த உவமையின் வேறு வேடங்களே என்பர் நல்லாசிரியர். ஒரே யொருவன் தானே அந்தந்த நேரத்துக்கு ஏற்ப பல்வகை வடிவம் புனைந்து நடித்தல்போல இந்த அணியின் தோற்றங்களும் பற்பலவாம். சாதாரண உலக வழக்கினும் கல்லார்வாயினும் ஒன்றி நின்று ஒளி செய்வது இந்த அணியின் இயல்பாம். ''அவளைப் பார் சூர்ப்பனகைபோல, ஓகோ இவளோ செல்ல இலக்குமி, ஆகா! அறவழிகாட்டிய காந்தி அண்ணலைப் பார்த்தாயா? இக்கலியுகத்தில் அவர் ஓர் அரிச்சந்திரன்'' இன்னவாறெல்லாம் மக்கள் தம் கருத்தை தெரிவிக்கும்போது ஓடி முன் வந்து அணிசெய்து நிற்பது இந்த உவமைதானே. உவமை இன்றேல் உலகிலே சுவையுமே பொன்றிவிடும். முறுகித் திரண்டு உருண்டு வளரும் முசுண்டைக் கொடியைப் பார்த்த புலவருக்கு வண்ணான் துறையிலே அடித்துத் தோய்த்து முறுக்கி எறிந்த துணி கண்முன் வந்துவிடுகிறதே.

## பகைப்புலக் காட்சி :

நல்ல காட்சி ஒன்றை நங்கண்முன் கொணர்ந்து காட்டித் தாமெடுத்துக்கொண்ட விடயத்திற்குக் களனமைக்கின்றார் குமரகுருபரமுனிவரர். பகலும் மாலையும் இரவும் ஒருங்கே கலந்திருந்த பான்மையிலே திருவாரூர்த் தியாகேசனும் செல்வமழலைக் குழவி முருகனும் திருத்தேவியாரும், ஒருங்கிருக்கின்றனர். சேயின் செங்குமுதவாய் தேனினைச் சொரிந்தாற்போல (அதற்குள்ளும் உவமை வந்துவிட்டதே!) ஏழிசை பழுத்த தீஞ்சொற்களை வழங்க அத்தனும் அம்மையும் தம்மை மறந்து அந்த வேதக்குதலையிலே

மனம் பறிகொடுக்கின்றனர். ''சுவாமி தியாகேசப் பெருமானே, குழந்தை மழலை அமுதத்தை இடையறு துண்ணும் நின் செல்வச் செவியிலே இப்புலையனேன் புன்மொழியையும் ஏற்று, பொன்னருள் செய்யும் நின் அற்புத வளத்தை என் வெற்று மொழியாற் புகல வல்லனே'' என்று என்புங் குழைய நின்றுருகுகின்றார் குமரகுருபரர். செல்வத் தியாகன் திருவருள் எல்லா உயிரிடையும் பாய்ந்தோடும் காட்சி ஒன்று அவனைத் தரிசிக்க வந்தபோது அப் பொழிலிடை நிகழ்ந்தது இப்போது பாடலுக்குப் பகைப்புலக் காட்சி (Back-ground) யாக அமைந்துவிடுகின்றது.

ஒண்கதிர் பரப்புஞ் செங்கதிர்க் கடவுள்
வெயில் கண் டறியா வீங்கிருட் பிழப்பிற்
புயல்கண் படுக்கும் பூந்தண் பொதும்பிற்
காவலர்ப் பயந்து பாதபத் தொதுங்கிய
இருவே றுருவிற் கருவிரன் மந்தி
பொன்னிறம் பழுத்த பூஞ்சுளை வருக்கை
முன்னுறக் காண்டலும் முனையெயி றிலங்க
மடித்தலத் திருத்தி வகிந்துவள் உகிரால்
தொடுத்தபொற் சுளைபல எடுத்துவாய் மடுப்பது
மானிட மடங்கல் தூணிடைத் தோன்றி
ஆடகப் பெயரின் அவுணன்மார் பிடந்து
நீடுபைங் குடரின் நிணங்கவர்ந் துண்டென
இறும்பூது பயக்கும் நறும்பணை மருத்த
தந்தணாரூ ரெந்தை யெம்பெரும்!

[திருவாரூர் நான்மணிமாலை 5]

**உவமைக்குள் உவமை :**

விலங்கின் இயல்பும் மனித இயல்பும் பொருந்திய மந்தி இங்கு இரணியன் உடல்கிழித்த சிங்க வடிவுங்கொண்ட நரசிங்கம் போன்றதாகின்றது. காவலனுக்குப் பயந்த மந்தி சோலையின் இலைபொதுளி இருள் நிறைந்த நுனியை அடைகின்றது. உரப்புங் காவலன் கூர்ங்கண்ணிலுமே படாமையாலே தானே பொன்போலப் பழுத்த பலாப் பழம் மந்தியனுருக்குப் பெருவிருந்தாகின்றது. இயற்கை

---

இருட்பிழம்பு - நிறைந்த (கட்டிபோன்ற) இருள்; பாதபத் தொதுங்குதல் - மரத்திற் பதுங்குதல்; இறும்பூது - அதிசயம்; பணைமருதம் - வயலைக்கொண்ட மருதநிலம்.

யிலே பல்லைக்காட்டும் மந்திக்குக் காத்திராத நிலையிலே பொற்பலாக்கனி கிடைத்தால் அதன் பல் எவ்வளவாகப் பளிச்சிடும்! கூர்நகத்தாற் சக்கை நீக்கிக் கரத்தாற் சுளை எடுத்து விருப்புடன் வாயிலிடுகின்றார் மந்தியனார். பலாப் பழம் இரணியன் வயிறாகின்றது. பழச்சக்கை அவன் குடலாகின்றது. சுளை நிணமாகின்றது. ஆகவே குரங்கனார் நரசிம்மாகின்றார்! உவமையுள் உவமைதாம் எத்தனை?

நலம்பல இலங்கக் கவிசெய்த குமரகுருபரர் இலக்கியத்தைச் சுவைத்தேனாக்கி நம்மைத் தேறல் மாந்தும் வண்டாக்கி விடுகின்றார்.

## ஔவைக்குக் கைதந்த உவமை:

இப்படி உவமையாற் சிறந்த பிறிதொரு சங்ககாலப் பாடலொன்றை நாடுவோம். ஔவையார் தமிழ்த் தாயார். கொடைவள்ளல்கள் பால்காடும் மலையுந் தாண்டி அவர்களைக் காணும் அவாவால் நடையில் வந்தெய்துவார். சாவா மூவாவரந்தந்த கருநெல்லியங்கனி அளித்த வள்ளல் அதியமானெடுமான் அஞ்சியை நாடி அவன் உளர் மருங்கை நண்ணியபோது இளஞ் சிறுவர் சிலர் செயலை ஆவல் கனியப் பார்க்கின்றார். அதனையே பாவில் உவமையாகவு மமைந்துவிடுகின்றார். ஒரு பெரிய அரசயானை குளத்தினுள் இறங்குகின்றது. சிறுகோவணமணிந்த சிறுவர் சிலரும் அஃதணியாப் பருவத்தினர் சிலரும் அந்த யானையில் தந்தத்தைப் பிடித்து உரோஞ்சி நீராற் கழுவுகின்றனர். சிலர் அதன் முதுகை மணல்கொண்டு உராய்கின்றனர். அதன் துதிக்கையைப் பற்றிக் கழுவுகின்றார் சிலர். அதன் காலின் பாகமும் வாலும் அவரால் அழுத்தித் தேய்க்கப்படுகின்றன. அந்தப் பென்னம்பெரிய யானை சின்னஞ்சிறியார் செய்வனவற்றுக் கெல்லாம் இடங்கொடுத்து அடங்கிக் கிடக்கிறது. பயந்த சுபாபம் உடைய சாந்த உருவம் கொண்ட மிருகமொன்று போலல்லவா அது காட்சிதருகிறது. குழந்தைகள் அடக்கு ஒடுங்கும் இந்த மிருகத்தின் பயங்கர உண்மை இயல்பு அவர் அதியமான் இல்லினை நணுகுதலும் தோற்றந்தருகிறது. அதுவே அப்பெருவள்ளலது அருமை வாய்ந்த உயர் உபசாரச் சிறப்பினையும் பகைவருக்கு அச்சந்தரும் அணுகரிய அவன்

பெருமையையும் எடுத்து நவிலுகின்றது. அந்த அருமைப் பாடலிதுதான் :

''உளர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெரும்களிறு போல
இனியை பெருமை எமக்கே! மற்றதன்
துன்னரும் கடாஅம் போல
இன்னுய் பெரும் நின் ஒன்னு தோர்க்கே''

குழந்தைகள் விழைவின்படி தன்னுடலைக் கழுவக் கொடுத்த அந்த யானையை அன்னை ஔவையார் யுத்த களத்திலே கண்டுள்ளார். ''பகைவர் புறங்காட்டி ஓடச் சிறுகண் நெருப்புச் சிதற நெருங்க முடியா மதத்துடன் வள்ளல் தன்பிடர்மிசை வீற்றிருக்க ஒருங்கு திரண்டு வந்த அரசர் எழுவரை ஒரு சேரவன் வென்று வாகை சூடக் காரணமா யிருந்ததல்லவா இந்த யானை! நம் மன்னனும் அத்தகையனே. புலவர் ஒருநாளைப்போலப் பலகாற் சென்றாலும் தலைநாளிற் காட்டிய விருப்பம் போலவே எத்துணை நாளும் தலை அணிசெய்யும் இயல் புடையன் இவன். புலவருக்கு இத்துணை எளியனுன எம் மன்னனை பகைவர் எள்ளத்தனையும் அணுக அஞ்சுவரே! வாழ்கநம் அதியமான் அஞ்சி!''

வல்லவனுக்குப் புல்லுமாயுதம். குளக்கரையிற் கண்ட காட்சி கிளவியாருளத்தில் எத்துணை எத்துணை உயர்வான எண்ணங்களை எழுப்பி பாட்டாகிவிட்டது. எல்லாவற் றிற்கும் அடிப்படையாக அமைந்த உந்த உவமை அணி களுக்கெல்லாம் மணிமுடித்தாள்.

முனிவரார் பாடலில் இந்த உவமை பக்தி உணர்ச்சிக்கு வித்தாக அமையப் புறப்பாடலிலோ அஃது எளிமைக்கும் பெரு வீரச் சுவைக்கும் அடிப்படையா அமையக்காணும் போதுதான் ''மந்திரம்போல் வேண்டுமடா சொல்லின் பம்'' என்ற பாரதியாரின் வாக்கில் வாணித்தெய்வம் வீற்றிருத்தலைக் காணுகிறோம்.

வாழ்க தலையாய உவமை!

---

கழாஅலின் - கழுவுதலினால்; துன்னரும் கடாஅம் - நெருங்கமுடியா மதம்; ஒன்னுதோர் - பகைவர்; இன்னுய் - துன்பம்.

புவியியல்

# இலங்கையின் மீன்பிடித் தொழில்

— மணிலா —

இலங்கையில் வாழ்க்கைத் தொழிலாக நடைபெற்றுவந்த மீன் பிடித் தொழில் வர்த்தக நோக்குடன் வளர்ச்சி பெறும் ஒரு கைத் தொழிலாக விளங்குகின்றது. நம் நாட்டு மக்களின் நாளாந்த உண வில் முக்கிய இடம்பெறும் மீன் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யமுடியாத நிலையில் இன்றும் வெளிநாடுகளிலிருந்து இறக்கு மதி செய்யப்படுகின்றது. நாட்டின் பொருளாதார விருத்தித் திட் டங்களிற்கூட மீன்பிடித் தொழிலுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்து வம் குறைவாகவே காணப்படுகின்றது. குறிப்பாகப் பத்தாண்டுத் திட்டத்தில் இதன் விருத்திக்கு ஒரு வீதமே ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அண்மையில் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக் கப்பட்ட பின் நாட்டின் சுயதேவைப் பூர்த்தி மட்டுமன்றி வர்த்தக விருத்தியையும் (ஏற்றுமதி) நோக்காகக்கொண்டு செயலாற்றி வரு கின்றது. எனவே இலங்கை மீன்பிடித் தொழிலுக்கும் அதன் எதிர் கால விருத்திக்கும் ஏதுவான பௌதிக பண்பாட்டுக் காரணிகளை நோக்கல் பொருத்த முடைத்து.

830 மைல் நீளமான கடற்கரையைக் கொண்டுள்ள இலங்கை அயன வலயத்துள் அமைந்துள்ளது. நாற்புறமும் நீராற் சூழப்பட்ட தீவுத் தன்மை, ஆழமற்ற கண்ட மேடை, நீரின் வெப்பம், பருவக் காற்று, நீரோட்டம், துறைமுக வசதி என்பன தொழில் வளரச் சாதகமாயுள்ளன. ஆறுகள் கொண்டுவரும் நைரொயின் சத்தும் கட லில் மீனுணவான பிளாங்ரன் ஏராளமாக வளர ஏற்ற சூழ்நிலையை உருவாக்குகின்றது. 300' க்கு கீழ்ப்பட்ட பகுதியில் மீனுணவு குறைவு. எனவே கண்டமேடை, கழிமுகப் பகுதிகள் என்பன மீனின விருத்திக்குச் சாதகமானவை.

இலங்கையைச் சுற்றி 8 - 10 மைல்வரை அகலமான கண்ட மேடை இருந்தபோதும் வடக்கில் இது கூடிய அகலம்கொண்டது: அதாவது பேதுரு மேடையும் (பருத்தித்துறை) வாட்ஜ் மேடையும் (மன்னார்) ஆகும். சாதகமான சூழ்நிலை காரணமாக கரையோரப் பகுதி, கழிமுகப் பகுதி என்பவற்றில் எங்கும் மீன்பிடிக் குடியிருப்பு கள் பரந்துள. யாழ்ப்பாணம், கற்பிட்டி, காங்கேசன்துறை, பருத் தித்துறை, மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மாத்தறை, சிலாபம், நீர்கொழும்பு என்பன சில முக்கிய மீன்பிடிப் பகுதிகளாம்.

பொதுவாக மீன்பிடிப் பரம்பல் மூன்று பிரிவின்கீழ் ஆராயப் படக்கூடியது. அவை: i கரையோர மீன்பிடி ii தூரக்கடல் மீன்பிடி iii நன்னீர் மீன்பிடி. கரையோரத்தில் கடற்கரைக்கப்பால் 20

மைலுக்கு மேல் மீன்பிடியாளர் செல்வதில்லை யாயினும் புதிய யந்திரம் பூட்டிய வள்ளங்களில் சிலர் 50 மைல்கள்வரையும் செல்கின்றனர். இலங்கையின் மொத்த மீன்பிடியில் 60% கரையோரத்தில் பிடிக்கப்படுகின்றது. 10 - 12 ஆண்டுகளில் வளர்ச்சியடைந்த தூரக் கடல் மீன்பிடியைப் பிற நாடுகளுடன் ஒப்பிட முடியாதபோதும் இலங்கையைப் பொறுத்தளவில் முக்கியம் வாய்ந்ததாக விளங்குகின்றது. மின்னேரி, பராக்கிரம, சேனநாயக்க சமுத்திரங்களில் நன்னீர் மீன்பிடி விருத்தியடைந்தபோதும் நீர்ப்பாசன இலாகாக்களின் திட்டங்களில் அதிகவிருத்தி தங்கியுள்ளது. இவைதவிர பாறை, முருகைக் கற்பார் பகுதிகளில் ஈர்க்குருல், அட்டைகள் என்பன பிடிக்கப்படுகின்றன.

மேலும் சதுப்பு நிலங்களில் 25,000 ஏக்கர் பரப்பில் மீன் பண்ணைகள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டது. இவ்வகைப் பண்ணை புத்தளத்தில் நிறுவப்பட்டு ரியூனு (Tuna) மீன், ருல் என்பன ஏற்றுமதிக்காக வளர்க்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இலங்கை மக்களின் மீன் நுகர்வு தலைக்கு 38 இருத்தலாகும். 1975 ல் இவ் வீதம் 53 இருத்தலாக - 50%- உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந் நிலையில் மொத்த உற்பத்தியளவு 90,000 தொன்னுகும். 1958 - 1960 இடையில் இவ்வளவு 24 % கூடியுள்ளபோதும் நாட்டுமக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாயில்லை. 1960 ல் 10½ கோடி ரூபாவிற்கு மீன் இறக்குமதி செய்யப்பட்டது.

இலங்கையில் மீன்பிடிக்கும் முறைகள் மிகப் பழமையானவை. பாய்மரம், கட்டுமரம் என்பவற்றின் உதவியுடனும், வலை வீசியும் மீன் பிடிப்பர். நவீன யந்திர வள்ளங்கள், 'நைலோன்' வலைகள் பாவனைக்கு வந்தபின்பே தூரக்கடல் மீன்பிடி விருத்தியடைந்தது. மீன்பிடிகாரர் நாளாந்தம் சென்று திரும்புவதால் பீன் பிடிக்கும் நேரம் குறைவாயிருப்பதுடன் கரையிலிருந்து செல்லும் தூரமும் அதிகமாயில்லை. பருவகால மீன்பிடியாகக் காணப்படலால் 6 மாதங்கள் தொழிற்பட்ட 50% மான வள்ளங்கள் 6 மாதமும் வெறுமனே விடப்படும். தொழிலில் ஈடுபடும் நேரம் 25% மாயும் மீதி போக்குவரவிலும் செலவிடப்பட்டாலும் பிடிக்கப்படும் மீன் சொற்பமாயுளது.

சாதிக்கட்டுப்பாடு காரணமாக குறிப்பிட்ட சிலரே இத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். மீனவக் குடும்பத்தில் 19% மான பெற்ருேரே தம் மக்கள் இத் தொழிலில் ஈடுபடுவதை விரும்புவர். இன்று 62000 பேர் இதில் இருந்தபோதும் பத்தாண்டுத் திட்டப்படி 1,40,000 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இவர்களில் 64% கல்வியறிவின்றியும் 75% கடன்பட்டோராயும் இருக்கின்றனர்.

படகுகளுக்கான பாதுகாப்புத் துறைகளின்மையும் முக்கிய குறையாகும். இன்று இங்குள்ள ஒரு சிறிய மீன்பிடித்துறை கொழும்பில் முகத்துவாரத்தில் கட்டப்பட்டுள்ளது. இது பெரிய கப்பல்களை நிறுத்த வசதியற்றது.

போக்குவரத்து வசதிக் குறைவாலும் இடமாற்றலிலும் பெரும் பங்கு கருவாடாகவே காணப்படுகின்றது. ஓரளவு வசதிகாரணமாக மீன்பிடிப்பதற்கும் நுகர்வதற்குமிடையில் $1\frac{1}{2}$ நாட்கள் இருப்பதால் பழுதடைகின்றன. இதனால் குளிரூட்டிமுறை ஏற்படுத்தலுடன் சந்தைப்படுத்தலிலும் துரிதமான போக்குவரத்து வசதிகள் அவசியம். மீன் உப்பிட்டுக் காய விடுவதிலும் சுத்தம் இல்லை.

மீனவனின் சராசரி வருமானம் மிகக் குறைவாகும். 140ரூபா மாதவருமானம் கிடைக்கிறது. இத்தகைய வாழ்க்கைத் தரத்தால் அவன் தன் தொழிலிற்கான சௌகரியங்களைப்பெற முடியாமல் உளது.

சந்தைப் படுத்தலிலும் மீனவரைவிடத் தனிப்பட்ட வியாபாரிகளே அதிக லாபம் பெறுகின்றனர். இதனால் மீன் பிடிக் கூட்டுத்தாபனம் மாவட்டம்தோறும் கிளைகளை நிறுவி மீனைக் கட்டுப்பாடான விலையின்கீழ் விநியோகித்துவருகிறது.

அரசாங்க ஊக்கமின்மையும் மீன்பிடித் தொழிலைப் பாதிக்கின்றது. தனிப்பட்டோருக்கான கடனுதவி நிறுத்தப்பட்டதால் பாதிப்பு ஏற்பட்டது. இன்று அபிவிருத்தியற்ற பகுதிகட்கே இது வழங்கப்படலால் விருத்தியடைந்த பகுதிகள் மேலும் பாதிக்கப்படுகின்றன. எனவே பெருமளவு முதலீடு அவசியமாகும், மேலும் அரசாங்கம் வலை, கயிறு இறக்குமதியைக் கட்டுப்படுத்தலால் இவற்றைப் பெறுவதும் சிரமமாயுளது.

அண்மையில் ஏற்பட்ட சூறுவளியாலும் பெருமளவு வடபகுதி மீனவக் குடும்பங்கள் நஷ்டமடைந்தன. பிறநாட்டுதவி கிடைத்தாலும் அது ஏற்றமுறையில் விநியோகிக்கப்படவில்லை. எனவே எதிர்பாராத ஆபத்து, கஷ்டம் என்பவற்றிலிருந்து மீட்கவும் தொழிலில் முன்னேறிச் செல்லவும் கஷ்ட நிவாரணம், ஆயுள் இன்சூரன்ஸ் என்பன போன்ற வசதிகளையளித்தல் அவசியம்.

மீன்பிடித் தொழில்பற்றிய புள்ளி விபரங்கள் நன்கு சேகரிக்கப்படாததால் உண்மையான மீன்பிடித் தொகையை அறியமுடியாதிருப்பதும் ஒரு குறைபாடாகும்.

இயந்திரப் படகு பழுதடைவதாலும் அணு குண்டுப் பரிசோதனையாலும் மீன்பிடி குறைவாக நடைபெறுகின்றது. சமீபத்தில் போயா விடுமுறை தினப் பிரகடனத்தால் இந் நாட்களில் சந்தை குறைவாக உளது.

இப்பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கம் பல முயற்சிகளைச் செய்து வருகின்றது. யந்திர மயமாக்கல், நவீனமுறைகளை அறிமுகப்படுத்தல், புதிய மீன்பிடித்துறைகளையும், படகு கட்டும் தளங்களையும் ஏற்படுத்தல், பாதுகாப்பு சேமிப்பு நிலையங்கள் நிறுவல், கடனுதவி, தொழில் நுட்ப உயிரின ஆய்வு என்பன முக்கியமாகும்.

இன்று சில பகுதிகளில் மீன்வளம் குறைந்து வருகின்றது. 'டைனமற்' பாவித்து மீன் பிடிப்பதால் இந்நிலை ஏற்படுகின்றது. இம் முறை இலங்கையில் சட்ட விரோதமானதென்றாலும் கவலையீனமும் அறிவின்மையுமே இதை மேற்கொள்ளக் காரணமாகும். எனவே இதை மக்களுக்குப் போதிக்க போதனாசிரியர்கள் பயிற்றுவிக்கப்படவேண்டும். அல்லாமலும் தொழில் நுட்ப முறையை புகுத்த இன்று நீர்கொழும்பில் உள்ளதுபோல் மீன்பிடிப் பயிற்சி நிலையங்கள் நாட்டின் பல பாகங்களிலும் அமைக்கப்படவேண்டும்.

மீனவர்களுக்கு திசையறிகருவி, பாதுகாப்புப்பட்டிகள், வெளிச்ச வீடு போன்ற வசதிகளையும் செய்யத் திட்டமிடல்வேண்டும். பருவக் காற்றுக் காலங்களில் படகுகளை எதிக்கரைக்கு நகர்த்தி உற்பத்தியை 50% கூட்டவும் அரசாங்கம் தீர்மானிக்கின்றது.

அண்மைய ஆய்வின்படி இலங்கையின் உள்ளார்ந்த வளம் 5,84,000 தொன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொழில் விருத்தியால் பல துணைத் தொழில்களான படகு கட்டல், திருத்தல், பாதுகாத்தல், மீனெண்ணெய், உர உற்பத்தி போன்றனவும் விருத்தியடைவதால் பலருக்கு வேலை வாய்ப்பளிக்கலாம். மேலும் விருத்தி காரணமாக அந்நிய செலவாணி இறக்குமதியில் குறைக்கப்படுவதுடன் வெளிநாட்டு சர்வதேச சந்தையிலும் இடம்பெறலாம்.

## கட்டுரைப்போட்டி முடிவு

**நான் விரும்பும் ஈழத்துச் சிறுகதை நூல்**

ஷை போட்டிக்கு வந்த பல கட்டுரைகளுள்
முதற் பரிசு பெறத் தகுதியுள்ள கட்டுரை கிடைக்காமையால்

**"தோணி-ஒரு பார்வை"**

என்ற கட்டுரை எழுதிய

திரு. வே. தன்பாலசிங்கம்
3ஆம் குறிச்சி, பொத்துவில்.

என்பவர் இரண்டாவது பரிசு ரூபா 10/- பெறுமதியான புத்தகங்கள் பெறுகின்றார்.

ஆசிரியர்

பரிசுக் கட்டுரை:

# தோணி — ஒரு பார்வை

எழுதியவர்: வே. தனபாலசிங்கம், 3-ம் குறிச்சி, பொத்துவில்.

ஈழத்து இலக்கிய உலகிலே - தமிழகத்தில் மணிக் கொடிப் பரம்பரையினர் என்ற ஒரு பரம்பரையினர் தோன்றியது போல ஈழகேசரி, சுதந்திரன் பத்திரிகைகள் ஒரு கணிசமான எழுத்தாளர் களைத் தங்கள் பரம்பரையினராக வளர்த்துக்கொண்டது. இன்றைய பெயர் தெரிந்த ஆசிரியர்கள் எல்லாம் அன்றைய ஈழகேசரி, சுதந் திரன் பண்ணையில் விளைந்தவர்களே! அவர்களில் ஒருவர்தான் திரு. வ. அ. இராசரெத்தினம். 15 வருட இலக்கிய வாழ்க்கையில் சம்பாதித்தவைகளின் முதலீடாக 62-ம் ஆண்டு வெளியிட்ட தோணி என்ற சிறுகதைத் தொகுதி அவருக்கு உழைப்பின் வெகுமதியாக சாகித்திய அகடமியின் பரிசைத் தட்டிக்கொடுத்தது.

ஆனாலும் பரிசுபெற்ற ஒரு தகமைக்காக அது ஒரு சிறந்த சிறு கதைத் தொகுதியாகி விடுமா? 1951 - 54-ம் ஆண்டுகளுக்கிடையில் வெளியான கதைகளைத் தொகுத்து பிறந்த மேனியாக வெளியிட் டது அவரின் துணிவுக்கும், இலக்கிய மதிப்பீட்டை நோக்குவதற்கு ஒரு திறவுகோலைத் தந்தமைக்கும் அவரைப் பாராட்டவேவேண்டும். அவர் எண்ணப்படி தேசியம், யதார்த்தம், முற்போக்கு என்ற கோஷங்கள் எழுவதற்குச் சற்றுமுன்னால் ஈழத்துச் சிறுகதை இலக் கியம் இருந்த ஓர் நிலையை எவ்விதம் இச் சிறுகதைத் தொகுதி பிரதிபலிக்கிறது?

எந்தச் சிறுகதை ஆசிரியனும் சிறுகதை படைக்கும்பொழுது இருக் கும் மனோ நிலையில் அவன் சிறுகதைத் தொகுதியைத் தொகுக்கும் பொழுது இருப்பதில்லை. உலகம் போற்றக்கூடிய கதைகளைப் படைத்துவிட வேண்டுமென்ற அவா, எண்ணம், சிந்தனை பேனாவைத் தொடும்பொழுது ஏற்படுவதுபோல தொகுக்கும்பொழுது கதைகள் ஒரு எழுத்தாளன் நெஞ்சில் தோன்றாமைக்குக் காரணம், அங்கு வியாபார நோக்கம் கலந்திருப்பதே! ஒரு சில ரூபாவுக்காக அவன் தன் உயர்ந்த சிருஷ்டிகளை ஒரு சேர விற்கத் தயாரில்லை. ஆகவே தெருவோரங்களில் நல்ல ஒரு சவர்க்காரப் பெட்டியையும் பெயர் தெரியாத சவர்க்காரங்களையும் 'சலோபேன்' பையில் அடைத்து விற்கும் வியாபாரியின் மனோநிலையிலேயே அவன் தன் சிறுகதை களைத் தொகுத்து அளிக்கிறான். இதை எந்த சிறுகதை வெளியீட் டாசிரியனும் மறுத்துவிட முடியாது. ஆகவே இந்த நோக்கில் ஒரு சிறுகதைத் தொகுதியைப் பார்க்கும்போது நல்லதும் கெட்டதும் இதில் கலந்திருக்கலாம் என்பது தெற்றெனப் புலப்படும்.

ஆசிரியர் கேட்பதுபோல உலகச் சிறுகதை இலக்கியத்திற்கு ஈழத்தின் பங்காக அமையக்கூடிய ஒரு சில கதைகளாவது இத் தொகுதியில் இருக்கிறதா? 'குணம்நாடிக் குற்றம்நாடி அவற்றுள் மிகை நாடி மிக்ககொளல்' என்ற வள்ளுவர் வாக்குக்கு இணங்கப் பார்ப்பதே சிறப்பு. கதைகளை ஆராயும்போது அவை பிறந்த கால கட்டத்தை நினைவில் இருத்தவேண்டியது முக்கியமாகிறது. ஆனாலும் 1951 - 54-ம் ஆண்டுகளுக்குள் பிறந்த கதைகளை இன்றைய கால கட்ட அமைப்பில் வைத்து ஆராய்வது தவறாயினும், அவற்றுள் காலத்தைவென்ற சிறுகதைகளும் உண்டா இல்லையா என்பதைப் பார்ப்பதும் முக்கியமாகிறது. இத் தொகுதியில் பதினான்கு சிறுகதைகள் உண்டு.

'பாலன் வந்தான்' என்பது அதன் முதலாவது கதை. இரவு பிறக்கப்போகும் பாலனின் காட்சியை எண்ணி 'எங்கள் வீட்டிற்கு பாலன் வருவான்' என்ற நம்பிக்கையில் இருந்த குழந்தை தகப்பனின் வெறி ஞானத்தால், கோபம்கொண்டு வையும் தாயின் அடியோடேயே ஏமாற்றத்துடன் உறங்கப்போய்விடுகிறது. அந்த சிறுமையக் கருத்தைவைத்து எழுதப்பட்டதுதான் பாலன் வந்தான்.

தந்தையைக் கொலைசெய்த காசியப்பன் அந்தத் தவறை மறைக்க உலகம் மறந்துவிட சிகிரியாவை சித்திரக்கூடமாக்குகிறான் என்பதைச் சொல்லவந்ததே கலைஞனும் சிருஷ்டியும்.

பாடுபட்டுப் பலன் காணப்போகும் நேரத்தில், இரவு காவல் குடிலில் கண்ணுறங்கியதால் பயிரே உழக்கப்பட்டு ஒரு மந்தைக் காட்டுப் பன்றிகளால் சீரழிக்கப்பட்ட அப்துல்லாவின் வாழ்வைப் படம்பிடிப்பதுதான் அறுவடை.

உள்ளே ஏறிய வெறியின் தன்மையில்தான் மனிதன் மிருகமாகிறான். வெறி அடங்கியபோது அவன் அன்பும் பட்சதாபமும் நிறைந்த மனிதனாகிறான் என்பதை விளக்கவந்த கதையே மனிதன்.

'காதற்ற ஊசியும் கடைவழிக்கு வராது காணும்' என்று உலகத்தையே வெறுத்து விட்டுப்போன துறவி பட்டினத்தாருக்கு நெஞ்சில் தாய்ப்பாசம் இருந்தது என்று சொல்ல வந்ததே பாசம் என்ற கதை.

மீன்காரனுக்கு மகனாய்ப் பிறந்து இளமையிலேயே தந்தையைப்போல் தோணியில் சென்று மீன்பிடிக்க வேண்டுமென்று கனவுகண்டு, தந்தையோடு மீன்பிடிக்கச் சென்றும், தோணி நமக்கு உரிமையற்றது என்றபோது, எப்படியும் தோணியொன்றை உரிமையாக்கிக்கொள்ள வேண்டுமென்று கனவு காண்கின்றான். ஆனால் அது அவனுக்கு நிராசையாகவே போய்விடுகிறது. தூண்

டில்காரனுக்குத் தோணி சொந்தமில்லை. உழவனுக்கு நிலம் சொந்தமில்லை. உலகில் உழைப்பவனுக்கு எதுவும் சொந்தமில்லை என்று விளக்கவந்த அருமையான கதைதான் தோணி.

தன் கணவன் வேறு பெண்ணோடு சிரித்துப் பேசுவதை எந்தப் பெண்ணும் சகிக்கமாட்டாள் என்று சொல்ல வந்ததே பெண்.

இரண்டு ஜாதி வகுப்பினிடைப்பட்டு அண்ணனும் தம்பியும் படும் வேதனையைச் சொல்வதுதான் குடிமகன்.

யாழ்ப்பாண எல்லைச் சண்டையில் வளர்ந்ததுதான் ஒற்றைப் பனை.

ஆயாவிடம் குழந்தையை வளர்க்கவிட்டு ஹாயாகப் படுத்துப் பொழுதுபோக்கும் கோகிலா குயிலால் மனந்திருந்திய கதைதான் கோகிலா.

ஒரு இறப்பு வீட்டில் கடைசியாக நடக்கும் ஒரு இறுதிப் பிரிவுபசாரம்.

சரஸ்வதி, இலக்குமி, யமன், கிருஷ்ணன் என்னும் கடவுளர் களைக்கொண்டு எழுத்தாளன், பணக்காரச் செட்டி, நீதிபதி, தொழிலாளி என்னும் மனிதப் பாத்திரங்களின் குண விசேடத்தை விளக்க வந்தது ஏமாற்றம்.

மதம் என்பது அபினி என்பதை நிறுவ வந்தது குருட்டுப் பேதுருவின் தர்மம் என்னும் கதை.

கடைசியில் இருக்கும் நம்பிக்கை என்னும் கதை வரப்போகும் சமுதாய அமைப்பின் நம்பிக்கையாகவே இருக்கவேண்டும். இன்றைய சமுதாய அமைப்பில் காதல் சுலபமாக நிறைவேறக்கூடிய ஒன்ரு என்ற கேள்விக்கு நம்பிக்கை பதில் தருகிறதோ என்னவோ.

இதுதான் பதினன்கு கதைகளும். இதில் பாலன் வந்தான், கலைஞனும் சிருஷ்டியும், பாசம், பெண், கோகிலா, ஏமாற்றம், தருமம் என்னும் ஏழு கதைகளையும் ஒருசொல்லிலேயே அடக்கி விடலாம். அவற்றில் எந்த யதார்த்த வாதமோ, பாத்திர அமைப்போ, உள்ளத்தில் நின்று நிலைக்கக்கூடிய ஒரு சிருஷ்டியாகவோ இல்லை. அவை எல்லாம் ஒரு சொல்லையோ, ஒரு வார்த்தையையோ விளக்கிப் பின்னப்பட்ட உருவகங்களாகவே தெரிகின்றன.

உதாரணமாக தன் தவறை மறைக்கக் காசியப்பன் சிகிரியாவைக் கலைக்கூடமாக்கினன். (கலைஞனும் சிருஷ்டியும்)

எல்லாப் பாசத்தையும் வெறுத்த பட்டினத்தாருக்குத் தாய்ப் பாசம் இருந்தது. (பாசம்)

தன் கணவன் வேறு பெண்களுடன் சிரித்துப் பேசுவதை எந்தப் பெண்ணும் விரும்பமாட்டாள். (பெண்)

இவைபோன்ற கருத்து முடிவுகளை விளக்க வந்ததே அந்தக் கதைகள் என்று சொல்லலாம்.

ஆனால் அறுவடை, மனிதன், தோணி, குடிமகன், ஒற்றைப் பனை, பிரிவுபசாரம், நம்பிக்கை என்ற ஏழு கதைகளும் மனித சிந்தனைகளை, உணர்வுகளை, கனவுகளை, கீழான தன்மைகளை, கவலையீனங்களை, வெறித்தனங்களை அழகாகவே சுட்டிக் காட்டுகின்றன.

மிருகமான நிலையில் மனிதன் செய்வதையும், மனிதனான நிலையில் அந்த மனிதன் செய்வதையும் மனிதன் என்னும் கதையில் காணும்போது குடிமகன் என்னும் கதையில் சந்திக்கும் அந்த மனிதர்கள் எந்த நிலையில் கண்ணப்பருடன் நடந்தார்களென்றும், அவர்கள் மனிதனான நிலையில் மாறும்பொழுது எப்படி நடக்கக் கூடும் என்றும் நாம் யூகிக்கலாம். பிரிவுபசாரத்தில் செபமாலைக் கிழவியின் மருமகள் ஒரு நல்ல பாத்திர அமைப்பு. சொந்தம் என்று வருபவர்கள் எந்த நோக்கத்துடன் வருகிறார்கள் சாவீடுகளுக்கு என்பதைப் பிரிவுபசாரம் செய்கிறது.

ஒரு பனைக்காகக் கோடேறி மறியல்போவது யாழ்ப்பாணத்துக்குப் புதிசல்ல. இன்றும் நடக்கக்கூடியதுதான். இத்தனைக்கும் சிகரம் வைத்ததுபோல் இருப்பது தோணி. 'ஒருநாளைக்குக் காலம் மாறத்தான்போகிறது. அன்றைக்கு எனக்குமட்டுமல்ல என் நண்பர்கள் எல்லோருக்குமே தோணி இருக்கும்' என்றும், 'அப்பொழுது உழவனுக்கும் நிலம் சொந்தமாக இருக்கும்' என்றும், பாத்திர வாயிலாக ஆசிரியர் சொல்வது பாத்திரத்தின் உணர்ச்சியோடொட்டியதாக நமது உணர்வைக் கிளறக்கூடியதாக இருக்கிறது. அறுவடையில் சந்திக்கும் அப்துல்லாக் கிழவனை இயற்கை வென்றுவிட்டது என்ற ஒன்று. மனித உழைப்பை இயற்கை தோற்கடிப்பதா என்ற கேள்வி எழுந்தாலும் அவனின் அயர்ந்த தன்மையைச் சுட்டிக் காட்டுவதா?

இருந்தும் தோணி அருமையான சிலபல கதைகளை வளரும் மனித சிந்தனையோடும், பரந்த உலக நோக்கோடும் படைத்திருப்பதே அதன் வெற்றிக்குப் போதுமானது.

★★

# தாஜ்மஹல்

— ஆர். ஆர். என். ஜார்ஜ் —

நீர் சுரந்தது கண்களில் உடன்
நெஞ்சடித்தது வேகமாய்,
ஊர் மறந்தது காட்சியில் பெரும்
உணர்வெனை யாட் கொண்டது.
பாரெலாம் ஒளி யானது; பாசம்
பாசம் என்றொலி கேட்டது,
தாரகை பல மின்னின ஒரு
தாஜ்மஹ லென்ற விண்ணிலே!

சென்ற ஆண்டு நான் டில்லிக்குச் சென்றபோது டில்லியிலிருந்து சுமார் 120மைல் தூரத்திலிருக்கும் ஒரு சொப்பனபுரிக்குப் போனேன். அந்தச் சொப்பனபுரியின் பெயர் 'ஆக்ரா'. மொகலாய மன்னர்களின் கலைச் சோலையாக விளங்கும் ஆக்ராவில், கலைக்கோவிலாகத் திகழ்வதுதான் 'தாஜ்மஹல்'. அந்தக் காதற்கோவிலைக் கண்ணுற்றதும் என்னுள்ளத்திலே ஏற்பட்ட உணர்ச்சிப் பெருக்கைத்தான் கவிதையாக ஆரம்பத்திலே தீட்டியிருக்கிறேன். ஆனால், பெண்மையின் வெற்றியை, காதலின் தெய்வீகத்தை பறை சாற்றி நிற்கும் இந்த வெண் பளிங்குக் கோவிலைப்பற்றி வர்ணிக்க வார்த்தைகள் ஏது? கவிதையாகத்தீட்டக் கற்பனைதான் போதுமா? ஆகவே! கல்லிலே கவிதை பாடும் தாஜ்மஹலைப்பற்றிய சில வரலாறுகளை மாத்திரம் உங்களுக்குக் கூற விரும்புகின்றேன்.

இந்தியாவை ஆண்ட மொகலாய மன்னர்கள் கலையார்வம் மிக்கவர்கள். ஃபதேபுர்சிக்கிரி, ஜும்மா மசூதி, டில்லிச் செங்கோட்டை, பல சமாதிகள் முதலியன மொகலாயர்கள் சிற்பக்கலைக்குக் கொடுத்த பேராதரவை எடுத்துக் காட்டுகின்றன. மொகலாயர்கள் கலைச் சின்னங்களில் அழியாப்புகழ் படைத்து உலக அதிசயமாகப் போற்றப்படுவது தாஜ்மஹலாகும். இதைக் கட்டிய மன்னனின் பெயர் 'ஷாஜஹான்' என்பதாகும்.

ஜஹாங்கீர் மன்னனது மகனுன இளவர் ஷாஜஹான் என்ற பெயரோடு பட்டத்துக்கு வந்தார். கி.பி. 1612ல் ஆஸப்கான் என்பவரது புதல்வியான மும்தாஜ்பேகத்தை மணந்தார். ஷாஜஹான் தனது மனேவியை மிகவும் காதலித்தார். 'மும்தாஜ் மஹல்' என்ற பெயர் அவரே சூட்டியதாகும். அதற்கு 'அரண்மனேயின் ஆபரணம்' என்பது பொருள். மும்தாஜ், அரண்மனேயின் ஆபரணமாக மாத்திரமல்ல, மன்னரது ஆபரணமாகவும், உயிராகவும் விளங்கினுள். அவர்களது இருபது ஆண்டு இல்லற வாழ்க்கை 'அன்பும் அறனும் உடைத்தாயின், இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது' என்ற வள்ளுவப்பெருந்தகையின் குறளுக்கு இலக்கியமாகத் திகழ்ந்தது. மும்தாஜ்பேகம், பத்தாவுக்கேற்ற பதிவிரதையாக வாழ்ந்து, எட்டு ஆண் மக்களேயும் ஆறு பெண் மக்களேயும் பெற்ருர். ஈருயிரும், ஒருடலுமாக வாழ்ந்த அவர்களின் வாழ்க்கை 1631-ம் ஆண்டு ஆனி மாதம் முடிவடைந்தது.

ஆம்! அரண்மனேயின் ஆபரணம், ஷாஜஹானின் மனே விளக்கு அணேந்தது. தக்கணத்திலுள்ள பர்ஹன்பூர் என்ற இடத்தில் மும்தாஜ்பேகம் மகப்பேற்றில் மாண்டுபோனுர். மரணப் படுக்கையில் மும்தாஜ் தனது நினேவுச் சின்னமாக சிறந்த ஒரு சமாதி கட்டும்படியாகக் கேட்டுக்கொண்டார். தனது அன்பு மனேவியின் விருப்பப்படியே மன்னன் 'தாஜ் மஹல்' என்ற எழில்மிகு கட்டிடத்தைக் கட்டிமுடித்தான். மும்தாஜ்பேகத்தின் சடலம் பர்ஹன்பூரிலேயே ஆறு மாத காலம் தற்காலிகமாக அடக்கம் செய்யப்பட்டிருந்தது. பின்பு தாஜ்மஹல் தோட்டத்தில் ஒரு கல்லறையில் வைக்கப்பட்டிருந்தது. கட்டிடம் முடிந்தபின்பு அரசியின் சடலம் நிரந்தரக் கல்லறைக்கு மாற்றப்பட்டது.

மனேவியின் மரணத்திற்குப் பின்பு ஷாஜஹானுடைய வாழ்க்கையில் ஒழுக்கம் தவறியது; பல துன்பங்கள் ஏற்பட்டன. ஆனுல் மனேவியிடம்கொண்ட அளவிட முடியாத அன்பின் காரணத்தால் 1632ல் தாஜ்மஹல் வேலே ஆரம்பிக்கப்பட்டது. தாஜ்மஹலே நிர்மாணித்த சிற்பி 'வெரோனியோ' என்ற இத்தாலியன் என்று சிலர் கருதுகிருர்கள்.

ஆனால் அதற்குப் போதிய ஆதாரமில்லை. உஸ்தாத்ஈஸா என்ற துருக்கிதேச சிற்பியும், அவரது மகனான ஷெரிஃப் என்பவருமே வெள்ளைப் பளிங்குக் கற்களினால் பாரசீக முறைப்படி தாஜ்மஹாலைக் கட்டினார்கள் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். இருபது ஆண்டுகள், இருபதினாயிரம் வேலையாட்கள் தொடர்ந்து வேலைசெய்து தாஜ்மஹாலைக் கட்டிமுடித்தார்கள் என்று கூறுகின்றார்கள்.

தாஜ்மஹாலைச் சுற்றி எழில் மிக்க தோட்டங்களும், நீரூற்றுகளும் இருக்கின்றன. இயற்கையும், செயற்கையும் ஒன்றுகலந்து அவ்விடத்தை கந்தர்வலோகமாக மாற்றுகிறது. சூரியனின் செங்கதிர்கள் தாஜ்மஹாலின் வெண் சலவைக் கற்களில் பட்டவுடனேயே தமது வெம்மையை விட்டு, தண்மை பெறுகின்றன. பெண்மைக்கு முன்னால் ஆண்மை தலைவணங்குவதுதானே நியதி! பௌர்ணமி தினத்தன்று தாஜ்மஹாலைப் பார்க்காத கண்களும் கண்களா? வெண்ணிலவு வானிலே பவனிவர, அந்த நிலவோடு போட்டியிட்டுக்கொண்டு, 'மண்ணிலவு' என்று போற்றுமளவிற்கு 'தாஜ்' ஜெகஜோதியாய் பிரகாசிக்க, 'விண்நிலவும் மண்நிலவும்' யமுனையில் இரு ஆபரணங்களாக ஜொலிக்கும் அந்தக் காட்சியை வர்ணிக்க வார்த்தைகளேது?

தாஜ்மஹாலில் நடும்ண்டபத்தில் எட்டு மூலைகளுள்ள ஒரு அறையிருக்கிறது. அந்த அறையின் மத்தியில் கணவன் மனைவி இருவரும் இணைந்து துயிலும் சலவைக்கல் கல்லறைகள் இருக்கின்றன. கல்லறையைச் சுற்றி; நுணுக்க வேலைப்பாடுகளுள்ள, கலைத்திறன் செறிந்த ஒரு சலவைக்கல் திரை இருக்கிறது. முன்பு, தங்கத்திரை இருந்ததாகவும், ஔரங்கசீப் அதை மாற்றி அமைத்ததாகவும் கூறப்படுகிறது. தாஜ்மஹாலின் சுவர்களில் எங்குபார்த்தாலும் ''குர்ஆன்'' வாக்கியங்களும், செடி கொடிகளும், மலர்களும், கனிகளும் செதுக்கப்பட்டிருக்கின்றன. தங்கம், வெள்ளி, நவரத்தினங்கள் முதலியவை அங்கு பதிக்கப்பட்டிருந்ததாம். ஆனால், இப்போது அவை அங்கே இல்லை. சிவப்பு, கறுப்பு, வெள்ளை சலவைக் கற்களைத் தவிர மற்றச் செல்வங்களை, ஆக்ராவைப் படையெடுத்த ஜாம் வம்சத்தினரும், மராட்டியர்

களும், இதரர்களும்கொண்டு சென்றுவிட்டார்கள் என்று கூறுகின்றார்கள்.

உலகமெல்லாம் தாஜ்மஹலின் கலைச்சிறப்பைக் கண்டு வியக்கிறது; இந்தக் கலைப்படையலுக்குக் காரணமாயிருந்த மும்தாஜ்மஹலையும், ஷாஹானையும் பாராட்டுகிறது. ஆனால் அவர்களது ஆத்மாக்களுக்கு சாந்தி உண்டா என்பது சந்தேகந்தான்! மகனால் ஔரங்கசீப்பால் ஆயுள் கைதியாக வைக்கப்பட்டு எழுபத்தினான்கு வயதில் மாண்ட ஷாஜஹானின் ஆவிக்கு நிம்மதியிருக்குமா? அல்லது பெற்ற பிள்ளைகளான மூராட், தாரா, சூஜா, ஔரங்கசீப் முதலியோர் இரத்த பாசமின்றி சண்டையிட்டு முன்னவர் மூவரும் ஔரங்கசீப்பால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதை அரூபியாகப் பார்த்துக்கொண்டிருந்த மும்தாஜ்மஹலின் ஆத்மாவுக்குத்தான் நிம்மதியுண்டா? ஆனால் தாஜ்மஹலில் சென்று அந்த ''அமரதம்பதிகளின் சமாதிகளைத் தரிசிக்கும் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் இனந்தெரியாத உணர்ச்சிகள் ஏற்றப்படுகின்றன. அந்த உணர்ச்சி உருப்பெற்று கடைசியில்: ''காயமே இது பொய்யடா!''
''பிறப்பு உண்டெனில் இறப்பும் நிச்சயம்''
என்ற தத்துவத்துக்கல்லவா இழுத்துச் செல்கிறது! ஆம்! தாஜ் மஹலால் ஆக்ரா ''தத்துவபூமி'' ஆகிவிட்டது!

* *
*

## மணியும் ஓசையும்

நேயர்கள் கேட்கும் நியாயமான கேள்விகளுக்கு இப் பகுதியில் பதில் அளிக்கப்படும். 10 சத இந்திய தபால் அட்டையில் கேள்விகளை எழுதிக் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்புக:-

**கா. தமிழ்த்தம்பி**
விஜயா பிரேம் ஓர்க்ஸ், பெரிய கடை வீதி - பழனி,
மதுரை மாவட்டம், **இந்தியா.**

புவியியல்

# சேனை வேளாண்மை

**வி. கந்தவனம் B. A.**

**1. உலர்ந்த வலயத் தாழ்நிலம்:**

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள தாழ் நிலங்களில் மழை குறைவு. வருடத்தில் நான்கு மாதங்கள் மட்டும் இப்பகுதிகளில் நல்ல மழை பெய்யும். ஏனைய எட்டு மாதங்களும் மழை மிகவும் குறைந்த நீண்ட வறட்சிக் காலமாகும். இதனால் இப்பகுதிகள் உலர்ந்த வலயம் (வறண்ட வலயம்) என அழைக்கப்படுகின்றன.

உலர்ந்த வலயத்தில் மழை பெய்யாத மாதங்களிலே தண்ணீருக்குப் பெருந் தட்டுப்பாடாக இருக்கும். மழைக்காலத்திற் கிடைக்கும் நீரைத் தேக்கி வைப்பதற்காக இப்பகுதியில் ஏராளமான குளங்கள் வெட்டப்பட்டுள்ளன. இரணைமடுக்குளம், கட்டுக்கரைக்குளம், நுவர வீவா, காலவீவா, கந்தளாய்க்குளம், மின்னேரியாக்குளம், பராக்கிரம சமுத்திரம், சேனநாயக்கா சமுத்திரம் என்பன உலர்ந்த வலயத் தாழ்நிலத்திலுள்ள பெரிய குளங்களாகும். இவற்றிலும் பார்க்கச் சிறிய குளங்கள் ஆயிரக் கணக்கில் இப்பகுதியில் உள்ளன. மழையில்லாத உலர்ந்த காலத்தில் இக்குளங்களிலுள்ள நீர் விவசாயஞ் செய்ய உதவுகின்றது.

**2. குளக் கிராமம்:**

உலர்ந்த வலயத்திற் குளம் இல்லாத ஊரே இல்லையெனலாம். குளத்துக்குச் சிறிது தூரத்திலுள்ள உயர்ந்த பகுதியிற் குடிமனைகளுந் தோட்டங்களும் இருக்கும். காட்டு விலங்குகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக வீடுகள் நெருக்கமாகக் கட்டப்பட்டிருக்கும். கிராமத்தின் கோயிலும் பள்ளிக்கூடமும் இந்த உயர்ந்த பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும்.

குளத்தைச் சுற்றியுள்ள தாழ்வான பகுதியில் நெல் வயல்கள் காணப்படும். குளத்திலிருந்து நீர் வெளியாக விடப்படும் வாயில் ''மடை'' எனப்படும். மழையில்லாதபோது மடையைத் திறந்து விட்டால், நீர் வாய்க்கால் வழி ஓடி வயலை அடையும். இவ்வாய்க்கால்களை வவுனியாப் பகுதியில் ''பீலிகள்'' என்று அழைப்பர்.

குடிமனைக்கும் வயல்களுக்கும் அப்பால் காடுகள் இருக்கும். குளத்தருகில் இருக்கக்கூடிய வெட்டை நிலத்தில் மாடு கன்றுகள் மேயும். மாடு, ஆடுகளை வளர்ப்பதற்கு இக்கிராமத்தவர் அதிக தொல்லைப்பட வேண்டியதில்லை. காலையில் அவிழ்த்துவிட்டால் வெட்டை நிலங்களிலும் காட்டுப் பக்கங்களிலும் மேய்ந்துவிட்டு, மாலையில் மாடுகள் தாமாக வீடு திரும்பும். ஒவ்வொரு குடும்பத்திலும் ஏறத்தாழ 20

அல்லது 30 மாடுகள் இருக்கும். இவர்களிடமிருந்து சுத்தமான பசு நெய் வாங்கலாம்.

3. ஈரவலயத் தாழ்நிலமும் உலர்வலயத் தாழ்நிலமும்:

இலங்கையின் தென்மேற்குப் பகுதிக்குத் தென்மேற்பருவக் காற்ருல் அதிக மழை கிடைக்கின்றது. இதனுல் இப்பகுதி ஈரவலயம் என்று அழைக்கப்படும். ஈரவலயத்திலுள்ள தாழ்நிலப்பகுதிக் கமக்காரர் தென்மேற் பருவக் காற்றைச் ''சிறுபோகக் காற்று'' என்று அழைப்பர். இக்காற்ருல் வைகாசியிலிருந்து ஆவணி வரை இப் பகுதிக்கு மழை பெய்யும். சிறுபோக நெல் விதைப்பு வைகாசியில் ஆரம்பமாகும். அறுவடை ஆவணியில் நடைபெறும். மழைக்காலத்தில் ஈரவலயத்தின் ஆறுகள் பெருக்கெடுக்கும். வெள்ளத்தினுல் வயல்களும் பாதிக்கப்படுவதுண்டு. ஈரவலயக் கமக்காரர் பெருந் தொல்லைப்பட்டே சிறுபோக வேளாண்மையைச் செய்கின்றனர்.

ஈரவலயத்துக்கும் உலர்ந்த வலயத்துக்குமிடையிற் பல வேறுபாடுகள் உள்ளன. உலர்ந்த வலயத்தில் மழை பெய்யுங்காலம் வேறு. இங்கு கார்த்திகை, மார்கழி, தை, மாசி மாதங்களில் வடகீழ்ப் பருவக் காற்ருல் மழை பெய்கின்றது. இப்பகுதிக் கமக்காரர் இக்காற்றை ''வாடைக்காற்று'' என அழைப்பர். தென்மேற் பருவக் காற்றிலும்பார்க்க இக்காற்றினுற் கிடைக்கும் மழை குறைவு. மழைக்காலமும் ஈரவலயத்திலும் பார்க்கக் குறுகியது. சில ஆண்டுகளில் மழை பெய்யாமல் இருப்பதுவும் உண்டு. மழையை நம்பி உலர்ந்த வலயத்திற் செய்யப்படும் வேளாண்மை பெரும்போகம் எனப்படும்.

4. சேனை வேளாண்மை:

பங்குனியிலிருந்து ஐப்பசி வரை உலர்ந்த வலயத்தில் வறட்சிக் காலமாகும். இக்காலத்தில் விவசாயஞ் செய்வது கடினம். நீர்ப்பாசனஞ் செய்யக்கூடிய பெரிய குளங்களைச் சூழ்ந்த பகுதிகளிற் சிறுபோகம் செய்வார்கள். குளங்களும் மழை பெய்யத் தவறினுல் வற்றிவிடும். இதனுல் விவசாயஞ் செய்ய முடியாது. குடிப்பதற்கும் நீர் இல்லாமற் போய்விடும். இத்தகைய வறட்சியினுற் பஞ்சம் ஏற்படுகின்றது. எனவே வறட்சியை எதிர்த்து விளையக்கூடிய குரக்கன், வரகு போன்ற பயிர்களை விளைவிக்கின்ருர்கள்.

உலர்ந்த வலயக் கமக்காரர் பஞ்சம் தோன்ருமல் இருக்கப் பலவாறு பாடுபடுகின்ருர்கள். தமக்கிருக்கின்ற சிறிய வயல்களோடு வேறு புதிய நிலங்களிலும் விவசாயஞ் செய்கின்ருர்கள். தமக்குரிய காடுகளை அழித்து அதிற் பல பயிர்களை விளைவிக்கின்ருர்கள். இத்தகைய வேளாண்மை ''சேனை வேளாண்மை'' எனப்படும். நெல் விளைவிப்பதற்குக் கமக்காரர் அதிகவேலை செய்தல் வேண்டும். மழை குறைவான உலர்ந்த வலயத்தில் இவ்வேலைகள் மேலும் கடினமாக

வுள்ளன. இதனுல் இப்பகுதிக் கமக்காரர் இலகுவாகச் செய்யக்கூடிய சேனே வேளாண்மையைப் பெரிதும் விரும்புகின்றனர்.

ஈரவலயத்துக்கு மழையைக் கொடுத்துவிட்டுத் தென்மேற் பருவக் காற்று மத்திய மலைகளைக் கடந்து உலர்ந்த காற்ருக இப் பகுதியில் வீசுகின்றது. வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் வீசும் இக்காற்றைச் ''சோழகம்'' என்று உலர்ந்த வலயக் கமக்காரர் அழைப்பர். இது மிகவும் வேகமாக வீசும். சோழகம் வீசத்தொடங்கி விட்டதென்ருல் உலர் பருவம் ஆரம்பித்துவிட்டதென்று பொருள். உலர்ந்த சோழகக் காற்று செடி, கொடிகளின் பசுமையை உறிஞ்சும்; குளங்களை வற்றச் செய்யும்; வானத்து முகில்களையும் அடித்துச் செல்லும்.

இத்தகைய தன்மை வாய்ந்த சோழகம் வீசத் தொடங்கியதும் சேனைக் கமக்காரர் தங்கள் காடுகளை வெட்டத் தொடங்குவர்.

உலர்ந்த வலயக் காடுகள் வன்மையான மரங்களைக் கொண்டன. சில மரங்களும், பற்றைகளும் கூரிய முட்களைக் கொண்டுள்ளன. யானை, கரடி, குழுமாடு முதலிய பெருவிலங்குகளும் பாம்பு, தேள், சிலந்தி போன்றனவும் இக்காடுகளில் வாழ்கின்றன. எனவே இத் தகைய காட்டை வெட்டுவது எளிதான ஒரு வேலையன்று. அனுபவமும் ஆற்றலும் இதற்கு வேண்டும். கமக்காரர் முள் குத்தாமல் இருப்ப தற்கு மாந்தோலாற் தாமே செய்த சப்பாத்தை அணிந்திருப்பர். கத்திகளால் அடர்த்தியான செடிகளையும் கொடிகளையும் வெட்டிக் கொண்டு, இரண்டு மூன்று பேர் முன்னுகச் செல்வர். அவர்களைத் தொடர்ந்து மற்றவர்கள் மரங்களின் கிளைகளைக் கோடரியால் வெட்டிக் கொண்டு செல்வர். சிறிது தூரம் சென்றதும் இரண்டொரு பெரும் மரங்களைத் தறித்துச் சிறு மரங்களுக்கு மேல் வீழ்த்துவர். இத ஞற் சிறு மரங்களும் முறிந்து நிலத்தில் வீழ்கின்றன. இம்முறையைப் பின்பற்றிக் காட்டை விரைவாக வெட்டி முடிப்பார்கள். ஆனுலும் இடையிடையே இரண்டொரு மரங்கள் வெட்டாமல் விடப்படுகின் றன. குடிசைகள் கட்டி வேளாண்மையைக் காவல் செய்ய இம்மரங் கள் பின்னுல் உதவியாக இருக்கும்.

வெட்டிய காட்டைச் சில நாட்களுக்கு நன்ருகக் காயவிடுவார் கள். இதற்குக் குறைந்தது இரண்டு கிழமைகளாவது வேண்டும். பின்னர் சோழகம் நன்ருக வீசும் ஒரு நாளில் காட்டுக்கு நெருப்பு வைப்பார்கள். உலர்ந்த காற்றின் தூண்டுதலால் காய்ந்த இலைகளி லும் சுள்ளிகளிலும் நெருப்புத் தடையின்றிப் பற்றும். இதனுற் காடு விரைவாக எரிந்து முடிந்துவிடும். எப்படித்தான் நன்ருகக் காடு எரிந்தாலும் இடையிடையே தடிகள், மரங்கள், அடிக்கட்டைகள் முதலியன எஞ்சியிருக்கும். காடு எரிந்து முடிந்ததிலிருந்து அந்நிலத் தைத் துப்புரவாக்குதலே கமக்காரருக்கு இருக்கும் பெரிய வேலை யாகும். கமக்காரருக்கு உதவியாக அவர்களின் மனைவியரும் பிள்ளை

களும் இவ்வேலையில் ஈடுபடுவர். அரைகுறையாக எரிந்த தடிகளைக் கொண்டு வேலி அடைப்பார்கள். இந்த மர வேலிகள் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். ஏனைய தடிகளைக் கும்பல் கும்பலாகப் பொறுக்கிப் போட்டு எரிப்பார்கள்.

இப்போது இந்த இடத்தைப் ''புலவு'' என்று சொல்வர். புலவைக் கலப்பையால் உழ முடியாதவாறு அங்கும் இங்குமாக ஏராளமான அடிக்கட்டைகள் இருக்கும். இவைகளைக் கிண்டி எடுப்பது ஒரு கடினமானவேலை. எனவே அப்படியே அவைகளை விட்டுவிடுவார்கள்.

இப் புலவில் வேளாண்மை செய்வதற்கு மழை வரும் வரை காத்திருக்கவேண்டும். மழை ஐப்பசியிற் பெய்யும். இதைத் தொடர்ந்து புலவில் நெல்லை விதைத்து மண்வெட்டியாற் கொத்தி விடுவார்கள். சிலர் குப்பை விருண்டியாலும் மேல் மண்ணைக் கிண்டிவிடுவதுண்டு. புலவில் உள்ள திடப் பகுதிகளில் சிலர் குரக்கன், சோளம், வரகு முதலியவற்றையும் விதைப்பார்கள். இன்னும் உயர்ந்த புற்றுப்பகுதிகளில் வெள்ளரிக்கொடி, வத்தகைக் கொடி ஆகியனவும் நடப்படுகின்றன. சோளப் பொத்திகளை அவித்து உணவாகக் கொள்ளலாம். பச்சையாகவும் சாப்பிடலாம். குரக்கனைக் காயவைத்து இடித்து மாவாக்குவர். இந்த மாவிலிருந்து பிட்டு, உரொட்டி முதலியன செய்யப்படுகின்றன. நெல் நன்றாக வளராத சில இடங்களில் எள் விளைவிக்கப்படுகின்றது.

காடுகளில் மரங்களிலிருந்து விழும் இலைகள் அழுகி மண்ணுடன் கலக்கின்றன. இது காடு தோன்றிய காலத்திலிருந்தே நடைபெற்று வருகின்றது. இதனால் காட்டு நிலத்தின் மண் மிகவும் வளமாக இருக்கும். காட்டை வெட்டி உருவாக்கும் புலவில் மண்ணின் வளம் காரணமாகப் பயிர்கள் செழித்து வளரும். அப்போதே புலவின் சொந்தக்காரன் அதற்குள் ஒரு குடிலைக்கட்டிக் காவல் செய்யத் தொடங்குவான். புலவைச் சுற்றிக் காடுகள் இருக்கும் அல்லவா? அக்காடுகளிலுள்ள மான், மரை, பன்றி போன்ற காட்டு விலங்குகள் சேனை நிலங்களை அழிப்பது வழக்கம். இதனால் இவ்விலங்குகளிலிருந்து பயிரைப் பாதுகாத்தல் வேண்டும். சில இடங்களில் குழு மாடுகள், யானைகள் முதலிய பெரிய விலங்குகளும் உலாவுகின்றன. இவை காவல் செய்பவரையும் தாக்கக்கூடியன. இத்தகைய இடங்களிற் புலவில் ஏற்கனவே விடப்பட்டுள்ள மரங்கள்மீது காவற் குடிசைகளை அமைப்பர். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒன்று அல்லது இரண்டு துவக்குகள் இருக்கும். பன்றி, மான், மரை முதலியன புலவிற் புகுந்தால் சுட்டுக் கொன்று விடுவர். அடுத்தநாள் காலை பிரதான வீதியில் நின்று போகும் வாகனங்களை மறித்து இவற்றை விற்பர். யானையைச் சுடுவதில்லை. துவக்கால் வானம் நோக்கிச் சுட்டு அல்லது தகரங்களில் அடித்துச் சத்தஞ் செய்து வெருட்டிக் கலைப்பார்கள். ஆயினும் சில சமயங்களில் யானைகள் கூட்டமாக வந்து இத்தகைய வெருட்டலுக்கும் போகாது புலவை அளிப்பதுண்டு.

நெல் மாசியில் வெட்டப்படும். அரிவி வெட்டுக்காலத்தில் குடும்பத்திலுள்ளவர்கள் புலவிலேயே சமைத்துச் சாப்பிடுவதுண்டு. பெண்கள், பிள்ளைகள் எல்லோரும் அரிவி வெட்டுதல், உப்பட்டி கட்டுதல், சூடு வைத்தல் ஆகிய வேலைகளிற் பங்கு பற்றுவர். பின்னர் நல்ல நாள் ஒன்றில் கதிர் அடிப்பு நடைபெறும். வெட்டையான ஓர் இடத்தைத் துப்புரவாக்கிக் குற்றி ஒன்றை வைத்து அதிற் கதிர்க் கட்டுகளை ஓங்கி அடிப்பர். வைக்கோலிலிருந்து நெல் விடுபட்டுக் குற்றிக்கு முன் பாகச் சேரும். நெல்லைச் சாக்குகளிற் கட்டி மாட்டு வண்டிகளில் வீட்டுக்குக் கொண்டு செல்வர்.

இவ்வாறு மூன்று ஆண்டுகள் புலவிற் சேனை வேளாண்மை செய்யப்படும். ஒவ்வோர் ஆண்டும் அடிமரங்களைக் கிண்டி எடுத்துப் புலவைத் திருத்திக்கொண்டு வருவார்கள். புதிய புலவில் விளைவு அதிகமாக இருக்கும். போகப்போக மண்ணின் வளம் குறைகின்றது. காலப் போக்கில் மண்வளம் அற்றுப்போனால் அந்நிலத்தைவிட்டு வேறு காட்டை வெட்டிச் சேனை வேளாண்மை செய்வர். கைவிடப்பட்ட நிலத்திற் பற்றைகள், செடிகள், கொடிகள் முதலியன மீண்டும் வளரத் தொடங்கும்.

இத்தகைய சேனை வேளாண்மைக்கு நீர் பாய்ச்சுவதில்லை. மழை பெய்தாற்றான் பயிர்கள் விளைகின்றன; இல்லை என்றால் அழிந்து விடுகின்றன. இத்தகைய காலங்களில் வேட்டையாடுதலும், தேன் சேர்த்தலும் சேனைக் கமக்காரரின் முக்கிய தொழில்களாக இருக்கும். சிலருக்குப் பிற வயற் காணிகளும் உள்ளன. அவர்கள் மழை இல்லாது போனால் நீர் பாய்ச்சி அவ்வயல்களில் நெல் வேளாண்மை செய்வர்.

சேனை வேளாண்மை மாங்குளம், ஒட்டுசுட்டான், வவுனியா, மதவாச்சி, தம்புள்ளை, கந்தளாய், அம்பாந்தோட்டை முதலிய பகுதிகளில் நடைபெறுகின்றது.

*

## அறிவுப்போட்டி இல. 6

**முடிவு திகதி:— 6-2-69**

**15-12-68 வெற்றிமணியில் உள்ள விபரங்களைப் பார்க்கவும்.**

*விஞ்ஞானம்*

# இன்சுலின் மருந்து கண்ட டாக்டர் பிரடரிக் பான்ரிங்

த. அரியரத்தினம். B. Sc. (Dip. in Ed.)

1946-ம் ஆண்டு இலண்டன் நகரிலே ஒரு நாள் நீரிழிவுக்காரரின் சங்கத்தின் கூட்டமொன்றிலே பின்வருமாறு ஒருவர் சொன்னர். ''டாக்டர் பான்ரிங் என்றெருவர் இருந்திருக்காவிட்டால் இன்று நாம் இங்கு மனிதர்களாகக் கூடியிருக்கமுடியாது. தங்கள் விதியை நொந்து வருந்தும் எங்கள் ஆவிகளின் கூட்டமாகத்தான் இருந்திருக்கும்'' இந்த வாக்கியத்தில் எவ்வளவு உண்மை. டாக்டர் பான்ரிங் அவர்கள் இல்லையென்றுல் இன்சுலின் இல்லை. இன்சுலின் இல்லையெனில் நீரிழிவுக்காரரின் வாழ்வும் இருந்திருக்கமுடியாது.

பான்ரிங்கின் பெற்ருேரின் விருப்பப்படி பட்டதாரியான இவர் கிறிஸ்துவப் பாதிரியாவதற்காக முயற்சிசெய்தார். பிரசங்கம் செய்யும் வல்லமை வராமற் போகவே மருத்துவப்படிப்பை மேற்கொண்டார். மருத்துவத்திற்கு நல்லகாலம். நீரிழிவுக்காரருக்கு விடிவு. காலம். உரம்பெற்ற உடம்பு, சிறிது வளைந்த தோள்கள், நீலப் பச்சைக் கண்கள், நீண்ட மூக்கு, பிடிவாதத்தைக்காட்டும் நாடி, இயல்பான கூச்ச சுபாவம். இவ்வியல்புகளைக் கொண்டவர்தான் டாக்டர் பான்ரிங்.

முதல் உலகப்போரில் கனடாதேசப் படையில் மருத்துவராகக் கடமைபுரிந்து, வீரச்செயல்களுக்காக 'சிலுவை' விருது பெற்ருர். இதன் பின்னர் இலண்டன் நகரிலே ஒன்ராறியோ என்ற இடத்தில் மருத்துவத் தொழில்புரிய ஆரம்பித்தார். பாவம் நோயாளிகள் எவருமே வரவில்லை. வருமானம் இல்லை. வாய்ப்பும் இல்லை. இவரோடு வாழ்ந்தால் என் வருங்காலமும் குட்டிசுவர்தான் என எண்ணி இவர் காதலியும் இவரை விட்டகன்ருர். இத்தகைய அவலமான நிலையில் தான் பான்ரிங் அவர்களின் பார்வை நீரிழிவு நோயாளிகள்மீது விழுந்தது. தன்னுடைய கடமை என்ன என்பதை உணர்ந்தார். தன் வீட்டுத் தளபாடங்கள், மருத்துவ நூல்கள், உபகரணங்கள் எல்லாவற்றையும் விற்ருர். வென்றுல் வாழ்வு என்று புறப்பட்டார்.

எதற்காக இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டார்? ஆம்; இத்தகைய நோயாளிகளின் பரிதாப நிலையைப் பார்த்ததுதான் காரணம். தன்னுடன் வகுப்பிற் படித்த மாணவி ஒருத்தி இந்தநோயின் கோரப்பிடியில் சிக்கி திடீரென்று இறந்தது இவர் உள்ளத்தைத் தொட்டது. இவரது மாமியார், திடகாத்திரமாக இருந்தவர் சிறுகச் சிறுக உருகி இறந்ததையும் பார்த்தார். இந்த நிகழ்ச்சிகளின் எதிரொலிதான் இவரை இந்த ஆராச்சியில் இறங்கச் செய்தது.

## மூளைக்கு வேலை

தகப்பனுடைய வயது 48 என்னுடைய வயதை 3 ஆற் பிரிப்பது தகப்பனுடைய வயதை எனது வயதாற் பிரிப்பதற்குச் சமம்.

என் வயது என்ன?

இந்த நோய்தான் என்ன? உடம்பின் சதைகள் எல்லாம் உருகி சிறுநீரோடு வெளியேறும் பயங்கரமான வியாதி இது என்று 2000 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு கிரேக்க உடநல வியல் வல்லுனர் கூறியுள்ளார். சக்தியைப் பிறப்பிக்கத் தேவையான சர்க்கரை எரிபடாமல் சேகரமாகின்றது. எனவே சக்தியைப் பெறவேண்டி உடம்பு நரமாமிச பட்சணிபோல் உடம்பை வளர்க்கும் புரதங்களையும், கொழுப்பையும் உண்ணத் தொடங்கிவிடுகின்றது. உடல் இதனுல் இளைக்கின்றது. இந்த நோயாளிகளின் தாகத்தை பல கலன் நீர்கூட தீர்க்காது. குறித்த நீரின் அளவு சிறுநீர் சர்க்கரையோடு வெளியேறும். அகோரப் பசியெடுக்கும். பசி தாங்க முடியாது. அதிகமாக உண்டு மறுநாளே இறக்கலாம். அல்லது உணவில் கட்டுப்பாடாக இருந்து சிறிதுநாள் வாழ்ந்து இறக்கலாம். இறப்பைவிட வேறுவழியே இல்லை. இதுதான் சர்க்கரை வியாதிக்கு இலக்கணம். கேட்க இனிய பெயர். ஆனுல் அனுபவிக்கப் பயங்கரமானது.

டாக்டர் பான்ரிங் அவர்கள் இல்லையேல் இன்றும் இந்த இருண்ட நிலைதான் இருந்திருக்கும். நல்ல காலம் அவர் பிறந்தார்; மருந்து கண்டார்; நாம் பிழைத்தோம். நமது உணவுத் தொகுதியில் இரைப்பைக்கு அண்மையில் வால்பேத்தை வடிவில் இருந்துகொண்டு சமிபாட்டு நொதிகளைச் சுரக்கும் சதையி என்ற உறுப்புக்கும் இந்த வியாதிக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாகக் கருதப்பட்டது. ஜேர்மனியில் ஒரு வைத்தியர் இந்தத் தொடர்பை அறிய நாயில் பரிசோதனை செய்தார். சதையி அகற்றப்பட்ட ஆரோக்கியமான நாய் நீரிழிவால் வருந்தியது. அதனுடைய சிறுநீரில் சர்க்கரை கலந்திருந்தது. இந்த அடிப்படையை வைத்துக்கொண்டு பலர் ஆராய்ச்சி செய்தனர். சதையி சுரக்கும் நொதியில் வெல்லத்தைக் கட்டுப்படுத்தும் ஏதோ ஒரு பொருள் இருப்பதாகக் கருதி சுரப்புகள் வராதவாறு சுரப்புகளை அடைத்தார்கள். அப்போது சதையி சுருங்கிக் கருகியதேழிய வெல்லம் கட்டுப்பாட்டுக்குள்தான் இருந்தது. சதையியில் இல்லாத பொருள் வேறெங்குதான் இருந்தது? இந்தப் பெயர் தெரியாத, உருத் தெரியாத கருவியை வேட்டையாடப் பல விஞ்ஞானிகள் புறப்பட்டனர். ஆனுல் வெறுங் கையோடு வீடு திரும்பினர். இந்த நிலையில் தான் பான்ரிங் அவர்கள் தன் 29 வயதில் பெஸ்ற் என்ற நண்பருடன் இந்த ஆராய்ச்சியில் இறங்கினர்,

மற்றவர்போல் அல்லாது இவர்கள் சதையியில் உள்ள 'தீவுக் கலங்களில்' தங்கள் கவனத்தைச் செலுத்தினர். இந்தக் கலங்களின் கால்வாய்களை அடைத்தனர். இவ்விதம் அடைக்கப்பட்ட சதையியை

உடைய நாயை மூன்று மாதங்களில் பரிசோதித்தபோது சதையி செழிப்பாகத் தொழிற்படுவதைக் கண்டு ஏமாந்தனர். மனம் தளர்ந் தார்களா? அதுதான் பான்ரிங்கின் வாழ்க்கையில் கிடையாதே. இப் படித்தான் முன்பொரு சமயம் போர்க்காலத்தில் கையில் ஏற்பட்ட காயத்தை ஆற்ற இயலாது கையை வெட்டி எடுக்கவேண்டும் என்று டாக்டர்கள் சொன்னபோது அதை எதிர்த்து தன் திட சித்தத் தாலேயே தானுகவே அந்தப் புண்ணை ஆற்றினுர். அத்தகைய துணி வுடையவர் மனம் சோர்வாரா?

தொடர்ந்து ஆராய்ச்சி வளர்ந்தது. நன்ருகச் சுருங்கி தொழில் இழந்த சதையம் கிடைத்தது. இதனைத் துண்டு துண்டாக வெட்டிக் கல்லுரலில் உறையச் செய்து அரைத்து வடித்தெடுத்தார்கள். இதில் சிறிய அளவை நோயால் வருந்திய நாய்க்கு ஏற்றி மணித்தியாலத் திற்கு ஒரு தடவை இரத்தத்தை பரிசோதனை செய்தார்கள். வெல்லத் தின் செறிவு குறைந்து குறைந்து போனது. பாதி வெற்றி. தொடர்ந் தது ஆராய்ச்சி. வளர்ந்தது அவர்கள் உற்சாகம். ஊன் இன்றி, உறக் கமின்றி, மெய்வருத்தம் பாராது ஆராய்ச்சி, ஆராய்ச்சி, ஆராய்ச்சி. இவர்கள் வடித்தெடுத்த திரவத்திற்கு ஐலெற்றின் (இப்பொழுது இன்சுலின்) என்று பெயர் இட்டார்கள். பரிசோதனைகளில் வெற்றி கண்டார்கள். தாயின் கருவில் இருக்கும்போது சதையி முழுக்க முழுக்க தீவுக்கலங்களாலானது என்பதை அறிந்தார்கள். தகுந்த முறையில் செய்தால் எந்த விலங்கிலிருந்தும் இதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் கண்டுகொண்டார்கள்.

முடிந்தது ஆராய்ச்சி. பிறந்தது இன்சுலின். முடிந்தது நீரிழிவின் கோரம். விடிந்தது வியாதிஸ்தரின் இருண்ட வாழ்வு. விஞ்ஞானிகள் அங்கீகரித்தனர். பரிசுகள் வந்து சேர்ந்தன. நோபல் பரிசு கிடைத் தது. மனிதருக்கும் நோயை மாற்றும் மருந்தாக அமைந்தது. இன்சு லின் மருந்து ஊசிமூலம் வியாதியால் பீடித்தவர்களுக்குப் புத்துயிர் அளித்தது.

ஆனுல் என்ன பரிதாபம். விதியால் பான்ரிங்சின் வெற்றி யைப் பொறுக் முடியவில்லைப்போலும். 1941-ம் ஆண்டு மேஜர் சேர் பிரடரிக் பான்ரிங் (வெற்றியின் பயனுல் கிடைத்த பட்டங்கள) விமானிகளுக்கு மருத்துவம் பற்றிய ஆராய்ச்சியில் பறந்து கொண் டிருந்த விமானம் பனிப்புயலில் சிக்கி விழுந்து நொருங்கியது. தன் சுவாசப்பையில் பெருத்த சேதம் ஏற்பட்டு வருத்தியபோதும் விமானி ஓட்டியின் ஊறுகளுக்கு சிகிச்சை செய்து, அவனுக்கு உயிர் கொடுத்து தான் மீழாத்துயில் கொண்டார். இறக்கும்போதும் உயிர் காத்த உத்தமன், இன்சுலின் மருந்து கண்ட மாமேதை புகழை நிலவவிட்டு மறைந்துகொண்டார். அவரது துணிச்சலும், ஆர்வமும் உங்களுக்கும் வளர்ந்து எல்லாவற்றிலும் வெற்றி பெற்று வாழ இந்தப் பொங்கல் திநாருளில் உங்களை வாழ்த்துகின்றேன்.

# முதலாளியும் தொழிலாளியும்

— இ. என். ராசா —

ஒரு முதலாளியின் கீழ் இரண்டு கூலியாட்கள் வேலை செய்கிறார்கள். ஒருவன் சுறுசுறுப்பானவன்; குணத்தில் பொறுமைசாலி. ஒருவன் சோம்பேறி; கர்வம் பிடித்தவன். இவர்கள் இருவரும் நெடுங் காலத்திலிருந்தே முதலாளி யுடன் ஒன்றிக்கொண்டவர்கள்.

எந்த வேலையையும் ஒழுங்காகவும், பயபக்தியுடனும், நேரம் பாராது, பட்டினி கிடந்து செய்துவரும் சுறுசுறுப் பானவனுக்குத்தான் வேலைகள் அதிகம். வயல் வேலைகள் ஒழிந்த மிகுதி நேரத்திலும் முதலாளியின் வீட்டு வேலை களையெல்லாம் தலைமேற்கொண்டு செய்வான். அவன் அப் படி மாடாக உழைத்தபோதிலும் முதலாளி அவனுக்கு ஒரு நாளாவது நன்றி சொன்னது கிடையாது. மாதா மாதம் சம்பளமும் சரியாகக் கணக்குப் பார்த்துக் கொடுத் தது இல்லை. அவன் வீட்டிலோ பெரும் கஷ்டம்; வறு மைப் பிணி தாண்டவமாடுகிறது.

''இத்தனை காலமாக அந்த முதலாளியையே நம்பித் தொழில் செய்கிறீர்களே என்ன பலனைக் கண்டீர்கள். அவரை விட்டு விலகி வேறு யாரையாவது பாருங்கள்'' என்று அவன் மனைவி மக்கள் கூறும்போதெல்லாம் ''இத் தனை காலம் அவர் உப்பைத் தின்று வளர்ந்துவிட்டு இப் போது அவரை உதறித் தள்ள முடியுமா?'' என்று மனைவி மக்களை ஏசுவான்.

சோம்பேறியின் வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சியாகப் போய்க்கொண்டிருக்கிறது. முதலாளிக்கும் அவன்மேற்றான் மிகுதியான அன்பு. அவனுடைய சம்பளத்தை மாதா மாதம் ஒழுங்காகக் கொடுத்துவிடுவார். அவன் தன் வீட் டுத் தோட்டத்து வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் போன்ற பொருட்களை இடையிடையே முதலாளி வீட்டிற் குக் கொண்டுபோய்க் கொடுத்துவந்ததாலோ என்னவோ முதலாளிக்கு அவன்மேற் பிடித்தம்போலும்.

காலச்சக்கரந்தான் நிற்பதில்லையே! பகல் இரவு என்று ஓடிக்கொண்டிருக்கிறது.

இருவருக்கும் வயது முதிர்ந்து நோய்கண்டு தொழில் எதுவும் செய்யமுடியாத நிலை ஏற்பட்டபோது தங்கள் முதலாளியிடம் போகின்றனர். ''இத்தனை நாட்களாக உங்களை நம்பியே வேலை செய்தேன். இந்த முடியாத காலத்தில் உதவி செய்யுங்கள்'' என்று முதலாளியிடம் கேட்கிறான் சோம்பேறி. சுறுசுறுப்பானவன் தன் தலைப் பிடரியைச் சொறிந்துகொண்டு பயபக்தியுடன் நிற்கிறான்.

முதலாளி இருவரையும் மாறிமாறிப் பார்க்கிறார். மனதிற்குள் சிரித்துக்கொண்டே சோம்பேறியைப் பார்த்துச் சொல்கிறார் ''மற்றவர்களை ஏமாற்றியதுபோல் என்னையும் ஏமாந்தவன் என்று இதுவரை காலமும் எண்ணிவந்தாய். கடைசியில் நீயே ஏமாந்துவிட்டாய். நீ செய்த வேலைக்கு மேலான கூலியை என்னிடமிருந்து பெற்றுக்கொண்டாய். எனக்குத் தீமை செய்துவந்த உனக்கு எந்த உதவியும் நான் செய்யத்தயாராயில்லை.

நன்மையே உருவமாகக்கொண்ட இவனைப் பார். இவனும் உன்னைப்போல் ஒருவன்தானே! இவன் என்னை ஏமாற்றவில்லை. எனக்காகச் சிலசமயம் பட்டினி கிடந்தும் நேர்மையாக உழைத்தான். எத்தனையோ துன்பங்கள் வந்தபோதும் என்னிடமிருந்து எந்தவித உதவியும் இவன் பெறுதற்கு எண்ணியதில்லை. உண்மையாக ஊழியம் செய்தான். என்னையே நம்பி வாழ்ந்தான். என்னிடமிருந்து உதவிபெற வேண்டும் என்ற உள்நோக்கோடுதான் நீ எனக்கு உன் தோட்டத்துப் பொருட்களைக் கொடுத்தாய். இவன் ஒன்றுமே எனக்குத் தரவில்லை. தன் உடலையே எனக்கு அர்ப்பணித்தான். இவனுக்கு உதவி அளிப்பது எனது முக்கிய கடமையாகும். உனக்கு எந்தவித உதவியும் செய்யமுடியாமைக்கு வருந்துகிறேன்.''

தீமையும் நன்மையும் செய்துவிட்ட இரு உயிர்கள் தங்களால் இயலாக் காலத்தில் முதலாளியாகிய ஆண்டவனிடம் போய் மன்றாடும்போது மேற்கண்ட பதில்தான்

கிடைக்கிறது. இளமையில் இறைவனை ஏமாற்றிவிட்டு முதுமையில் நாம் அவனிடம்போய் மன்றாடினால் எந்தப் பலனும் நமக்குக் கிடைக்கவே கிடைக்காது.

'அவனின்றி ஓர் அணுவும் அசையாது' என்பதில்நம் பிக்கை வைத்து, இன்று அன்பை விதைத்தாற்றானே நாளை அறுவடைக்குப் போகலாம் என்பதை உணர்ந்து, ஆண்டவன் நம்மை வருத்துவது கொல்வதற்காக அல்ல கொடிய துன்பங்களை அகற்றி நம்மை நல் நிலைப்படுத்து வதற்கே என்பதை மனதிலே நம்பி, நாம் அவருக்குச் செய்யும் தொண்டிற்குப் பிரதியுபகாரத்தை எதிர்பார்க் காமல் எல்லாம் நீயே என்று இறைவனிடத்திலே நம்மை ஒப்படைத்துவிட்டால் எல்லாம் என்றும் இனிதே நடை பெறுமல்லவா?

* * *


## வாய்வு சூரணம்

மலச்சிக்கல், மலக்கட்டு, உஷ்ண பித்த வாய்வுகள், கை கால் இடுப்பு மூட்டுகள் வலி பிடிப்பு-வயிற்று வலிக்குச் சிறந்தது. (பத்தியமில்லை)

150 கிராம் டின் ரூபா. 4-00

(தேவைக்கு எழுதவும்)

## வீரகேசரி மாத்திரை

ஜீவசக்தி கனவிலும், சிறுநீரிலும் வெளியாவதை கட்டுப்படுத்தி நாடி நரம்புகளுக்கு வலுவும் உறுப்புக்கு உறுதியும் இழந்த சக்தியும் நீடித்த சக்தியும் அளிக்கும்

100 பில்ஸ் ரூ. 25; 50—ரூ. 13, 24—ரூ. 7. (மெழுகு ரூ. 4)

(பார்சல் சார்சு தனி)

**பண்டிட்: S. V. R. கண்டர் சன்ஸ் R. I. M. P.**

அரிசிப்பாளையம், சேலம் - 9. (S. I.)

கிடைக்குமிடங்கள்:-

(1) ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, சிலோன் (2) அமிர்தலால் அன் கோ. (மெடிக்கல் ஸ்ரோர்ஸ்) 146, நைனியப்ப நாயக்கன் தெரு, சென்னை- 3. (3) ராஜா மெடிக்கல், 31, தர்மராஜா கோவில் தெரு. பெங்களூர் கண்ட். (4) வல்லராம் 188 A, தாராவிரோடு, பம்பாய்-17

கட்டுரை:

# அன்புத் தமிழரின் இன்பத் திருநாள்

— முல்லையூர்மணி —

இன்றுதான் தைப்பொங்கல் திருநாளா? என்றுமே யில்லாத குதூகலம் வீட்டிலுள்ள அத்தனை பிரஜைகளின் முகங்களிலும் பளிச்சிடுகின்றதே! ஆம்! அம்மா விரைவுடனே வீடுவாசலைக் கூட்டி மெழுகி ஒழுங்கு செய்கிருள். அக்கா வெங்கலப் பொருட்கள், வேறு பாத்திரங்கள் முதலியவற்றையும் எடுத்து கிணற்றடியில் போட்டு மினுக்குகின்ருள். அண்ணன் விடிந்தும் விடியாத இக் கன்னிக் காலை வேளையிலே தோய்கின்ருனே! தங்கை பொங்கலுக்கு வேண்டிய ஒழுங்குகளையும், முற்றத்தில் பொங்கவேண்டிய இடத்தையும் தேர்ந்தெடுத்து அவ்விடத்தை மெழுகிக் கோலமிட்டு ஆவன செய்கின்ருள். தம்பியா? அவனுக் கென்ன? குதூகலத்துக்கும், மகிழ்ச்சிக்கும் கேட்கவா வேண்டும்! பட்டாசுகளை ஆசை தீரச் சுட்டுத்தள்ளிக் கொண்டேயிருக்கின்ருன். அய்யா திண்ணையில் அமர்ந்து கொண்டு எல்லா ஒழுங்குகளுக்கும் சந்தோஷம் பொங்கி வழியவே தலைமை தாங்குகின்ருர்.

நேரம் தன்பாட்டுக்கு ஓடிக்கொண்டிருக்கிறது. அது நிற்கவா போகின்றது? நேரம் காலை ஐந்துமணியைத் தாண்டிக்கொண்டிருக்கின்றது. பொங்குவதற்கு எல்லா ஒழுங்குகளும் முடிந்துவிட்டன. பொங்குவதற்கென்றே முற்றத்தில் மெழுகிக் கோலமிட்ட அந்தப் புனித மயம் செறிந்துள்ள இடத்திலே இரண்டு குத்து விளக்குகள் ஒளியுமிழ்ந்து கொண்டிருக்கின்றன. சாணத்தால் ஆன பிள்ளையார் தனது முடியில் மூன்று அறுகம் புல்லைத் தாங்கிக்கொண்டிருக்கின்ருர். எல்லாவற்றிற்கும் மத்தியில் வாழை நுனியிலையிலே நெல் பரப்பி அதன்மேலே ஒரு நிறைகுடம் காணப்படுகின்றது. தாவரங்கள் அளித்த அழகுமிகு வண்ணநிறப் பூக்கள் நிறை குடத்தையும், கோலமிட்ட இடத்தையும் அலங்கரிக்கின்றன. பக்கத்திலே அடுப்பு நெருப்பை வீசிக்கொண்டிருக்கின்றது. பொங்கல் சருவம் அடுப்பின் மேல் வைத்துமாயிற்றே!

## மின்மினிப்பூச்சி

தாவரங்கள் சூரிய ஒளியை இரசாயன சக்தியாக மாற்றுகின்றன. மின்மினிப்பூச்சிகளோ இரசாயன சக்தியை ஒளியாக மாற்றுகின்றன. மின்மினிப்பூச்சிகளின் ஒளியிலே சாதாரண மற்ற ஒளிகளைப்போல் வெப்பமில்லை. அதன் ஒளி குளுமையானது. ஆனால் ஒரு 60 வாட் மின்சாரபல்பு கொடுக்கும் ஒளியை 137,000 மின்மினிப்பூச்சிகளிலிருந்துதான் பெறமுடியும்.

குணகடல் நீலப்பேழை திறந்து செவ்வரவிந்தம் விரிகதிர்கள் பல கொண்டு மலர்கின்றது. ஆம்! பகலவன் அதேநேரம் சருவத்திலுள்ள பொங்கலமுதமும் அவன் வரவுக்கு மகிழ்ச்சி கூறி அவனை நோக்கிப் பொங்குகின்றது. ஆஹா! எவ்வளவு அருமையான காட்சி! எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி கொப்பளிக்கின்றதே! வீட்டு அங்கத்தவர்கள் அத்தனை பேரும் வரிசையாக நின்று மிகுந்த ஆசாரமாக சூரியனைக் கைகூப்பி கிழக்கு வானம் நோக்கித் துதிக்கின்றனர். அத்தனைபேர் மனதிலும் ஒருவித சாந்தி தோன்றுகின்றது. ஒருவித திருப்தி அவர்களது நெஞ்சத்தினுள் வியாபித்து விரிகின்றது.

தம்பி படபடவென்று பட்டாசுகளைச் சுட்டுத்தள்ளுகின்றான். நேரமும் எட்டு மணியைத் தாண்டிவிட்டது. பொங்கிமுடிந்து சூரியனுக்கு ஒரு இலையில் அமுது படைக்கிறாள் அக்கா. கற்பூரத்தீபம் சுடர் விடுகின்றது. எல்லோரும் திரும்பவும் சூரியனை வணங்குகின்றனர். எங்கோவுள்ள கோயிலிலிருந்து வந்த வெற்றிமணியின் ''டாண் டாண்'' ஓசை அவர்கள் காதிலே துல்லியமாகக் கேட்கின்றது. தங்கை மனமுருகத் தேவாரம் பாடுகின்றாள்.

இறுதியில் பொங்கல் நாள் தந்த புதுத்தெம்புடன் புது உவகையுடன் அமுதம் உண்ணுகின்றனர். ''தமிழுக்கும் அமிழ் தென்று பேர்'' என்று பாடினான் புரட்சிக்கவி பாரதிதாசன். அத்தகைய தமிழமிழ்தத்திலே நாள்தோறும் அமிழ்ந்திருக்கும் இத்தமிழர்கள் இன்று - பொங்கலன்று - பொங்கலமுதத்தையும் உண்ணுகிறார்கள். தமிழனின் உண்மையான இன்முகத்தை தைப்பொங்கலன்று காணமுடியும் என்று வேறு நான் சொல்லவும் வேண்டுமோ?

# சிற்றி ரெக்ஸ்ரைல்ஸ்

272, பிரதான வீதி,

நீர்கொழும்பு.

★

*for*

QUALITY TEXTILES

*Visit*

# City Textiles

272, MAIN STREET,

**NEGOMBO.**




# இலங்கையும் உணவு நெருக்கடியும்

எம். கே. சதாசிவம்,
வித்தியானந்தக் கல்லூரி, முள்ளியவளை.

இன்று நாட்டிலே அநேக பிரச்சனைகள் நாட்டின் அரசியலையும் பாதிக்கக்கூடிய வகையில் தாண்டவமாடி வருகின்றன. இவற்றுள் உணவு நெருக்கடியே தலை தூக்கி நிற்கிறது. இலங்கையிலே தற்போது ஏறக்குறைய ஒருகோடியே இருபது லட்சம் (12000000) மக்கள் வாழ்கின்றனர். இலங்கையில் ஒவ்வொரு காலையிலும் எண்ணூறு (800) குழந்தைகள் பிறக்கின்றன என்று இலங்கையின் சனத்தொகை புள்ளி விவரம் கூறுகின்றது. இவ்விதம் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே வரும் மக்களுக்கு உணவிடவேண்டிய நிலை இன்றய அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

ஆனால் இன்றைய இலங்கை தனது சுய உற்பத்தியின் மூலம் இலங்கை வாழ் மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்யவில்லை. இரண்டு பிடி சோறு ஒரு மனிதன் உண்பானேயானால் அதில் ஒரு பிடிதான் இலங்கையில் உற்பத்தி செய்ததாகும். மற்றய ஒரு பிடியும் வெளிநாட்டிலிருந்து இரந்து வாங்கியதாகும். பல செல்வந்தர்கள் வாழும் ஒரு கிராமத்திலே ஒரு ஏழை எவ்வாறு மதிக்கப்படுகிறானோ அதேபோன்றுதான் உலக நாடுகளிடையே இலங்கை மதிக்கப்பட்டுவருகிறது.

இலங்கை மக்கள் தாம் எவருக்கும் பணிந்து நடக்க முடியாது என்று நினைக்க முடியாது. ஏன்? எமக்கு உணவு அனுப்பும் நாட்டுடன் அல்லது அதன் துணை நாட்டுடன் கோபித்தால் விளைவு பாரதூரமாகும். நாம் நினைத்தபடி நாம் வாழவேண்டுமானால் எமது அத்தியாவசிய தேவையான

உணவு முழுவதையும் நம் நாட்டிலேயே உற்பத்திசெய்ய வேண்டும். குறிப்பாக உணவு விஷயத்தைப் பொறுத்த வரையில் இப்பொழுது அரசாங்கம் ஆற்றிவரும் சேவைகள் போற்றுதற்குரியன. இலங்கையின் வடபகுதியைப் பொறுத்த வரையில் இரணைமடு, வவனிக்குளம், முத்துஐயன்கட்டுக் குளம், தண்ணிமுறிப்பு, பாவற்குளம் போன்ற இன்னும் எத்தனையோ பல பெரிய நீர்ப்பாசனக் குளங்களின்கீழ் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் நெல் உற்பத்திக்காகவும் உபஉணவு உற்பத்திக்காகவும் தொழிற்பட்டு வருகின்றன. இவை போன்ற பல நூற்றுக் கணக்கான நீர்ப்பாசனத் திட்டங்களினுல் இலங்கையின் பல பாகங்களிலும் பல இலட்சக் கணக்கான ஏக்கர் நிலங்கள் உணவு உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இலங்கை சுதந்திரமடைந்து இருபது ஆண்டுகள் கடந்தும் இன்று நாட்டிலே நிலவும் பிரச்சனைகளைப் பார்க்கும் போது சுதந்திரம் என்பதற்கு ஒரு அர்த்தமும் இல்லாமலே காணப்படுகிறது. உணவு விஷயத்தில் பிற நாடுகளை நம்பி இருத்தல் பெரும் அபாயமாகும். எமக்கு வழமையாக அரிசி அனுப்பிவந்த நாடுகளான பர்மாவும், தாய்லாந்தும் தமக்கு ஏற்பட்ட உணவு நெருக்கடி காரணமாக 1967-ம் ஆண்டு முதல் இலங்கைக்கு அரிசி அனுப்ப முடியாது எனத் தெரிவித்தன. தற்பொழுது சீனுவே இலங்கைக்கு தான் வழமையாகக் கொடுத்து வந்த அரிசியை ஏற்றுமதி செய்கிறது. இவ்வேளையில் அரிசி வரும் கப்பலில் தீப்பற்றுமானுல் இலங்கை வாழ் மக்களின் அடிவயிற்றிலும் தீப்பற்றிவிடும்.

இப்படிப்பட்ட அநேக பிரச்சனைகளில் இருந்து தப்புவதற்கு ஒரே ஒரு வழி உணவு உற்பத்தியைப் பெருமளவிற் பெருக்கி எமது சுய தேவையைப் பூர்த்தி செய்வதுதான். பழமை, பழமை என்று பழமையை மட்டும் பேணி வந்தாற் போதாது. எமது நாடு அரிசியை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது என்று பண்டைக் காலச் சரித்திரம் கூறுகிறது என்று புகழுரை பகர்ந்தால் மட்டும் போதாது. இக்கூற்றை அயல் நாட்டவர் ஒரு கேலியாகக் கொள்வரே அன்றிப் புகழாக எண்ணமாட்டார்கள் என்பது முற்றிலும் உண்மை. கேலி செய்வோருக்கு நாம் நல்ல பாடம் கற்பிக்க வேண்டு

மானுல் உணவு உற்பத்தியைப் பெருக்குவதைவிட வேறு வழியில்லை.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு பழைய முறைகளைக் கைவிட்டு நவீன முறையில் விவசாயத்தை வளர்க்க வேண்டும். இதைப்பற்றித் தெளிவாக அறிந்துகொள்ளக் கிராமங்கள் தோறும் விவசாயப் போதஞசிரியர்கள் போற்றுதற்கரிய பணிபுரிந்து வருகின்றனர்.

''இலங்கை உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையும் பொன்ஞன நாள் எந்நாளோ அந்நாளே இலங்கை அன்னியரிடம் இருந்து விடுபட்ட திருநாளாகும்''

* * *

# போஷாக்குக் குறைவு

ஆ. ஆரோக்கியநாதர், தும்பளை.

போஷாக்குக் குறைவால் இலங்கையில் அநேகர் இறந்துள்ளனர். நாகரீகமடைந்துள்ள சமுதாயம் இப்போக்கை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டாது. பட்டினியால் ஒருவரும் இறந்ததில்லை என்று நம்மவர் பெருமையுடன் கூறிக்கொண்டிருக்கின்றனர். ஆனுல் போஷாக்குக் குறைவால் பெருந் தொகையானவர்கள் இறக்கின்றனர் என்ற செய்தி எவருக்கும் சந்தோஷமளிக்கமாட்டாது. இக் கசப்பான உண்மையைபற்றிய புள்ளி விபரங்களை வெளியிட்டமைக்காக மருத்துவ இலாகா மாபெரும் தேசிய சேவையாற்றியுள்ளதென்று போற்றவேண்டும். போஷாக்குக் குறைவால் இலங்கையில் இரண்டாயிரம் பேர் இறந்துள்ளனர் எனப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

சுகாதார சேவைக்கும், சமூக சேவைக்கும் இது ஒரு சவாலாக அமைந்துள்ளது. இப் புள்ளி விவரங்களை நுணுக்கமாக ஆராய்ந்தால் மேலும் பல உபயோகமான விபரங்கள் கிடைக்குமென்பதுறுதி. எந்தெந்த இடங்களில் போஷாக்கின்மையால் மக்கள் இறந்துள்ளனர். அவை நகரப்புறமா, கிராமப்புறமா என்பதையும் ஆராய்ந்தறிதல் நன்மை பயக்கும். இத்தகைய கோணங்களிலிருந்து இப் பிரச்சினையை ஆராய்வதால் பிரச்சினை தீர்வதற்கான வழிகளும் பிறக்கலாம். பாடசாலை செல்லும் மாணவர், மாணவிகளிடையே அரைவாசிப்பேர் போஷாக்குக் குறைவால் வாடுகின்றனர் என்று சமீபத்தில் நடத்தப்பட்ட ஒரு மதிப்பீட்டிலிருந்து தெரியவந்துள்ளது. எமது தேசியத் தலைவர்களுள் ஒரு சாராரின் போதனைக்கும், சாதனைக்குமுள்ள

வேறுபாட்டையே இது புலப்படுத்துகிறது. பல்வளங்களும் நிறைந்த அப்பூமியில் போஷாக்கின்மையால் மக்கள் மடிகின்றனர் என்றால் அது எமது தலைவர்களின் செயல் திறமைக்கு மாபெரும் இழுக்காகும் என்றே கூறவேண்டும்.

போஷாக்குள்ள கீரை வகைகள், பழ வர்க்கங்கள், மீன் வகைகள் முதலியன இலங்கையில் ஏராளமாகக் கிடைக்கின்றன. ஆனால் 1965 1966-ம் ஆண்டிற்கான புள்ளி விபரங்களின்படி 1104 பேர் இரத்த புஷ்டிக் குறைவாலும், 700 பேர் சோகையாலும் இறந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது. கயரோகத்தால் இறந்தவர்களும் பலர் போஷாக்குக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்தனர். வறுமையும், அறியாமையுமே போஷாக்கின்மைக்கு மூல காரணங்களாகும். அன்றாட உணவுக்கு வழியில்லாமல் கஷ்டப்படும் குடும்பம் போஷாக்குள்ள உணவு வகைகளை தேடிக்கொண்டிருக்கமுடியாது. வயிற்றை நிரப்ப சோறு மட்டும் கிடைத்தாலே அதிஷ்டம் என்றே அவர்கள் கருதுகின்றனர்.

ஏழைகளின் உணவில் போஷாக்குள்ள அம்சங்களாக விளங்கிய பருப்பும், கருவாடும் கடந்த பல வருடங்களாகக் கிடைப்பதரிதாய் இருந்து வந்துள்ளது. நகரங்களிலே உள்ள ஏழைக் குடும்பங்களில் பால் மா நோயாளர்களுக்கும், குழந்தைகளுக்கும் சத்துள்ள உணவாக அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் அதுவும் பகிரங்கச் சந்தையில் கிடைப்பதரிதாகிவிட்டது. தேசிய அரசாங்க ஆட்சியில் மீன் வகைகளின் விலையும், காய்கறிகளின் விலையும் குறைவாகவே காணப்பட்டுள்ளது. எனினும் குறைந்த வருவாயுள்ளவர்கள் இவற்றைப்போதுமான அளவு வாங்கி உண்ண இயலாதவர்களாயிருக்கின்றனர்.

போஷாக்கின்மையால் மக்கள் இறப்பதால் எமது நாட்டில் வறுமை இன்னமும் கொடூரமாகவே இருக்கிறது. போதிய வருவாய் உள்ளவர்களிடமும் போஷாக்குக் குறைவு காணப்படுகிறது. போஷாக்குள்ள உணவுகள் எவை என்ற விஷய ஞானம் இவர்களிடம் குறைவாயிருப்பதே இதற்குக் காரணமாகும். மாப்பொருள்களையும், சர்க்கரைப் பொருள்களையுமே இவர்கள் அதிகம் விரும்பி உண்ணுகின்றனர். ஆனால் இவற்றில் போஷாக்குச் சத்து குறைவாகவே காணப்படுகின்றது.

அதிக உணவு பயிரிடும் இயக்கத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் போஷாக்குள்ள உணவு வகைகளை அதிகமாக உற்பத்தி செய்ய மக்களைத் தூண்ட வேண்டும்.

சுகாதார இலாகாவும் போஷாக்குள்ள உணவுகள் பற்றிய விபரங்களை பிரசாரங்கள் மூலம் மக்கள் அறியச்செய்ய வேண்டும். போஷாக்குக் குறைவை ஒழித்துக்கட்ட வறுமை ஒழிக்கப்படுவதோடு அறியாமையும் அகற்றப்படவேண்டும்.

# ஆறுமுக நாவலர்

கே. சரோஜினிதேவி
இந்துக்கல்லூரி, மல்லாகம்.

ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணத்து நல்லூரிலே சைவ வேளாளர் குடும்பத்திலே 1822 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 23 ஆம் திகதி பிறந்தார். இவருடைய தந்தை பெயர் கந்தப்பிள்ளை. தாய் பெயர் சிவகாமி அம்மையார். இவர் இளமையில் நல்லூரில் இருந்த திண்ணைப் பள்ளியிலே சுப்பிரமணிய உபாத்தியாயரிடம் ஆரம்பக் கல்வி பயின்றார். அதன் பின்னர் சரவணமுத்துப் புலவரிடமும் இருபாலையிலிருந்த சேனாதிராஜ முதலியாரிடமும் முறையாகத் தமிழ் பயின்றார். வடமொழியையும் நன்கு கற்றுத் தேர்ந்தார்.

இவர் தமது 12 ஆம் வயதில் யாழ்ப்பாணத்திலுள்ள மத்திய கல்லூரியில் ஆங்கிலங் கற்கத் தொடங்கினார். இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் விற்பன்னராக இருந்ததுடன் சிறந்த விவேகியாகவும் ஒழுக்கம் நிறைந்தவராகவும் காணப்பட்டார். அக்காலத்தில் மத்திய கல்லூரி அதிபராக இருந்த பீற்றர் பார்சிவல் துரை இவரது திறமையைக்கண்டு அங்கே ஆசிரியராகப் பணிபுரியும்படி வேண்டிக்கொண்டார். ஆறுமுகநாவலர் கல்விப் பணியை மேற்கொண்டு அங்கே ஆசிரியராகக் கற்பித்து வந்தார். பார்சிவல் துரை இவரிடம் தமது சமய நூலாகிய பைபிளைத் தமிழில் மொழிபெயர்க்கும்படி பணிந்தார். நாவலர் பெருமான் பைபிளைத் தமிழில் மொழிபெயர்க்கும் பொழுது கிறிஸ்தவ சமயத்தைப்பற்றியும் நன்கு அறிந்துகொண்டார்.

இவருடைய அறிவு ஒழுக்கம் ஆகியனவற்றைத் தாய் நாடாகிய இந்தியாவிலும் பலர் அறிந்திருந்தனர். இவருடைய பிரசங்கத்தை எல்லோரும் மகிழ்வுடன் கேட்டறிந்தனர். இவர் பல சைவ பரிபாலன சபைகளை ஏற்படுத்தினார்.

ஆறுமுக நாவலர் சைவத்துக்கும் தமிழுக்கும் தன்னை அர்ப்பணம் செய்தார். இவர் தமிழையும் சைவத்தை

யும் வளர்க்கக் கருதிப் பலருக்குப் பாடஞ்சொல்லிக் கொடுத்தார். அவர்களில் பொன்னம்பலப்பிள்ளை, சபாபதி நாவலர், வைத்திலிங்கம்பிள்ளை ஆகியோர் சிறந்து விளங்கினர். நாவலர் பெருமான் ஏட்டில் இருந்த பல அரிய தமிழ் நூல்களைச் சென்னையில் உள்ள தமது அச்சுக் கூடத்தில் பிழையின்றிப் பதிப்பித்துள்ளார். நாவலர் பெருமான் பாலபாடம், இலக்கணச் சுருக்கம், இலக்கண வினுவிடை, பெரியபுராண வசனம், நன்னூற் காண்டிகையுரை, திருவிளையாடல் புராண வசனம் முதலிய பல நூல்களை எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்திலும், சிதம்பரத்திலும் பல பாடசாலைகளைக் கட்டுவித்தார். அப் பாடசாலைகள் இன்றும் ''நாவலர் பாடசாலை'' என்ற பெயருடன் விளங்குகின்றன. நாவலர் பெருமான் 1879ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் வீடுபேறெய்தினர்.

***

# சமூக சேவை

இ. நா. மங்கையர்க்கரசி, ஊரங்குணை, ஏழாலை வடக்கு, சுண்ணுகம்.

அகிலத்தில் பிறக்கும் ஆதி மனிதன் முதல் அகிலம் விட்டு அந்தரத்தே பாயும் இன்றைய விஞ்ஞான மனிதன் வரை தான் ஆடியடங்கும் காலத்துக்குள் பற்பல சேவைகளைச் செய்கிறுன். அரசாங்கத்துக்குச் சேவை, ஆண்டவன் சந்நிதானத்துக்குச் சேவை, நோய்த் துன்பத்தில் வாடும் அம்மா அப்பாவுக்குச் சேவை, இப்படிப் பற்பல சேவைகளைச் செய்கிறுன் மனிதன். தன்னுடைய இறுதி யாத்திரைக்குள் ஏதாவது ஒரு சேவை செய்யாத மனிதனே இல்லையென்று துணிந்து கூறலாம். இது அறிஞர்களின் துணிபு. தனி மனிதனுக்குச் செய்யும் சேவையிலும் பார்க்க பாமர மக்கள் கூட்டத்துக்கு சமுதாயமாகிய சமூகத்துக்குச் செய்யும் சேவையொன்றே மிகச் சிறந்ததெனக் கொள்ளலாம்.

ஆண்டவன் படைப்பில் ஆன்மாக்கள் அத்தனையும் சமனே. ஆனால் அவற்றைத் தாங்கிநிற்கும் இப் பொக்கை யாகிய உடல் மட்டும் வெவ்வேறு உருக் கொள்கிறது. அன்றியும் மனித இனத்தைப் பொறுத்தவரையில் பொருளாதார ரீதியில் ஏற்றத் தாழ்வாகப் படைக்கப்பட்டுவிடுகிறான். இது அவன் செய்த வினைப்பயனைப் பொறுத்தது. சமுதாயத்தில் அகப்படும் மனிதருள் கல்வியறிவு குறைந்தவர்களாக, உண்ண, உடுக்க, உறங்க வசதியற்றவர்களாக உற்றார் உறவினர் அற்றவர்களாக, காலனால் வஞ்சிக்கப்பட்ட விதவைகளாக, மக்களை இழந்த அபலைகளாக நோய்த்துன்பத்தில் சிக்கிச் சீரழிந்தவர்களாக, சுயஅறிவை விதிக்குப் பலி கொடுத்துத் தெருவில் சுற்றிவரும் பைத்தியக்காரர்களாக, ஓட்டைக் கையிலேந்தி பொருள்கேட்டு நிற்கும் பரதேசிகளாக, வாழ்க்கையே வேண்டாமென்று வெறுத்து ஆண்டவனே கதியென்று நிற்கும் ஞானிகளாக எத்தனையோ மனிதர்கள் வாழ்வதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இத்தனை மக்களுக்கும் மனித இனம் சேவை செய்யவேண்டும். இதுவே சமூக சேவை. வாடிவதங்கும் அவ் விதயங்களை மற்றவர்களைப்போல் மகிழ்ச்சி பொங்கச் செய்வதுதான் சமூக சேவை. இதற்காகத்தான் சாரணர் படையும் செஞ்சிலுவைச் சங்கமும் தோற்றுவிக்கப்பட்டன.

ஒரு நாட்டில் பற்பல சமூகங்கள் வாழ்கின்றன. நாட்டுக்குச் சேவைசெய்ய அரசாங்கத்தால் ஒரு படை திரட்டப்பட்டால் அது பல சமூகங்களுக்குச் சேவைசெய்வதற்காகத் திரட்டப்பட்டதெனக் கூறலாம். எனவே பொலிஸ் படைகூடச் சமூக சேவைக்கென்றே தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் அது பாதுகாப்புப் படையென்றே பெயர் கொண்டியங்குகின்றது.

சமூக சேவைமூலம் சமூகத்தின் ஏற்றத் தாழ்வுகளை ஓரளவு சீர்செய்யலாம். இதை உணர்ந்து நமது அரசாங்கமே சமூக சேவை இலாகாவைத் தோற்றுவித்திருக்கிறது. ஏழை மக்களுக்கும் விதவைகளுக்கும் இந்த இலாகா தன்னால் இயன்ற பொருளுதவி செய்கிறது. இது ஏழை மக்களுக்குக் கொடுத்த வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும். அரசாங்கம் நாட்டில் சமூக சேவைக்கென கிராமமுன்னேற்றச் சங்

கங்கள், சனசமூக நிலையங்கள், நூல் நிலையங்கள் போன்றவைகளுக்குப் பணஉதவி புரிந்துவருகின்றது.

சமூகசேவைவையைப் பொறுத்தவரையில் நம்நாட்டைவிட அமெரிக்கா, பிரான்சு, மேற்கு ஜேர்மனி போன்ற நாடுகள் மிகத் திறம்படத் தத்தம் சேவையைப் புரிகின்றன. எங்கள் நாட்டில் சமூக சேவை முன்னேறுததற்குக் காரணம் பொருளாதார வளர்ச்சியின்மையும், மக்களின் கூடிய ஒத்துழைப்பின்மையுமே. பிறநாட்டவர்கள் தங்கள் நாட்டுக்கு மட்டும் சேவைசெய்வதோடு நிற்காது அரசியல் தொடர்பு பாராது மற்றைய நாடுகளுக்கும் உதவி செய்வதைப் பார்க்கும்போது அவர்களைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

சமூக சேவையில் இப்போது ஈழமணித் திருநாட்டில் நல்ல முன்னேற்றத்தைக் காணமுடிகிறது. சிரமதானம், அனாதைகளை ஆதரிக்கும் நிலங்கள், பழக்கவழக்கங்களைப் புகட்டும் மடங்கள் என்பன போதிய வளர்ச்சியடைந்து வருகின்றன. இத்தனையும் திறம்பட மற்ற நாடுகளுக்கு ஈடு கொடுக்கவேண்டுமானால் இவ்வியக்கங்கள் அனைத்தும் மதச் சார்பற்ற, மொழிச்சார்பற்ற பொதுநல அடிப்படையில் இயங்கவேண்டும். அப்படியானால் எங்கள் சமூகங்கள் முன்னேறி நாடே ஒளிவீசி ''இந்து சமுத்திரத்தில் ஒளிவீசும் முத்து எங்கள் ஈழமணித் திருநாடு'' என்ற வாக்கைக் காப்பாற்றும்.

**



வெற்றிமணி

யாழ்ப்பாணப் பகுதி விற்பனையாளர்

அன்பு புத்தகசாலை

27-D பெரியகடை

யாழப்பாணம்



# பேனா நண்பனின் கடிதம்

சாலை இளந்திரையன்

தில்லி,
இந்தியா.
1-1-69.

அன்புள்ள நடராசாவுக்கு!

உன்னுடைய 14-12-68 கடிதம் கிடைத்தது. நீயும் தங்கையும் அப்பா அம்மாவும் நலம் என்று அறிந்து மகிழ்ந்தேன். நீ அனுப்பியிருந்த உங்கள் குடும்பப் புகைப்படத்தை என் அப்பா அம்மாவும் அக்காவும் பார்த்து மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்கள். என் அக்காள் குழந்தையாக இருந்தபோது உன் தங்கையைப்போலவே இருந்தாளாம்; அப்பா அம்மா சொன்னார்கள். அக்காளும் உன் தங்கையின் படத்தைப் பார்த்து மகிழ்ந்துகொண்டாள்.

'நீ எப்படி இருப்பாய்? கறுப்பா? சிவப்பா? ஒல்லியாக இருப்பாயா தடியாக இருப்பாயா?' இப்படியெல்லாம் நான் பலதடவை நினைத்துப் பார்த்ததுண்டு. அழகழகான எழுத்துக்களில் நீ கடிதம் எழுதும்போதெல்லாம் என் கை எழுத்து அப்படி இல்லையே என்று நான் நினைப்பேன். உன் முகமும் உன் எழுத்தைப் போலவேதான் அழகாக இருக்கும் என்று அடிக்கடி நினைத்துக் கொள்வேன். நான் நினைத்தது சரிதான்; நீ அழகாக இருக்கிறாய்!

என் அக்காள் அடிக்கடி என்னைப் பார்த்து, 'நீ அழகாகச் சிரிக்கிறாயடா' என்று மகிழ்ச்சியோடு சொல்லுவாள். உன் தங்கையைப் பார்த்தபிறகுதான் என் அக்காளின் மகிழ்ச்சி எனக்குப் புலப்படுகிறது. உன் தங்கை என்னைவிடச் சிறியவள். படத்தில் அவள் சிரித்துக்கொண்டிருப்பது எவ்வளவு அழகாக இருக்கிறது! என் அக்காள் என்னைச் சொல்லுகிற மாதிரித்தான் நீ உன் தங்கையைப் பார்த்துச் சொல்லுவாய் என்று நினைக்கிறேன்....

நாலைந்து நாட்களுக்கு முன் நானும் அக்காளும் இங்குள்ள செங்கோட்டையைப் பார்க்கப் போயிருந்தோம். ஊர்பார்க்க வந்

திருந்த ஓர் யாழ்ப்பாணக் குடும்பத்தாரும் அங்கே வந்திருந்தார்கள். அந்தக் குடும்பத்திலும் இரண்டே குழந்தைகள். அந்தப் பையனுக்கு உன் வயதுதான் இருக்கும். அவனைப்போலவே உயரமாயிருந்த அந்தப் பெண் அவன் அக்காளோ தங்கையோ தெரியவில்லை. இரண்டுபேரும் உற்சாகமாகத் தங்கள் பெற்றோர்களுடன் போனார்கள். அங்கங்கே உள்ள வேலைப்பாடுகளமைந்த சுவர்களையும் சன்னல்களையும் தொட்டுத் தொட்டுப் பார்த்தார்கள். நாங்கள் அவர்களையே பார்த்துக்கொண்டு அவர்கள் பின்னால் போனோம்.

நான் அந்தப் பையனையே பார்த்துக்கொண்டு சென்றதைக் கண்ட என் அக்கா ''ஏன்டா அவனை அப்படி முறைக்கிறாய்?'' என்றாள். நான் ஒன்றும் பேசாமல் அவளைப் பார்த்தேன். இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டோம்.

சிறிது தூரம் சென்றதும் ''அக்கா அந்தப் பையனைப் பார்த்தாயா?'' என்றேன். ''அதுதான் எனக்கும்சேர்த்து நீயே பார்த்துவிட்டாயே! அந்தப் பையனுக்கு என்ன?''என்று சிரித்தாள் அவள்.

''என்னுடைய கடித நண்பன் நடராசா இப்படித்தான் இருப்பான்'' என்றேன் நான். என் பார்வை மீண்டும் அந்தப் பையன் போய்க்கொண்டிருந்த திசையில் படர்ந்தது. ''அவனை எங்கே பார்த்தாய் நீ?'' அக்கா இப்படிக் கேட்டதும் நான் திகைத்துப் போனேன். பிறகு ஒருவாறு என்னைச் சமாளித்துக்கொண்டு ''என் நண்பனின் ஊர் யாழ்ப்பாணம். அவனுக்கும் பதினைந்து வயதுதான்'' என்றேன்.

''யாழ்ப்பாணத்துப் பையன் ஒருவனுக்குப் பதினைந்து வயது இருந்தால் அவன் உனது நடராசாதானுக்கும்?'' என்று சிரித்தாள் அவள். ஆனாலும் என் அக்கா கெட்டிக்காரி!

''உன் நண்பனைப்பற்றி இந்தப் பையனிடம் விசாரிப்போமா?', என்றாள். நானும் அப்படித்தான் நினைத்துக்கொண்டிருந்தேன். அவள் சொன்னவுடன் அவளை முந்திக்கொண்டு அவர்களை நோக்கி ஓடினேன். கிட்டப்போன பிறகுதான், என்ன கேட்பது, எப்படிக்கேட்பது என்று எனக்குத் தெரியவில்லை. அக்காள் முகத்தைப்பார்த்தேன்.

''சார்! உங்களுக்கு யாழ்ப்பாணமா?'' என்று அந்தப் பையனின் அப்பாவைக் கேட்டாள் அக்கா.

''ஆமாம். என்ன வேண்டும்? உங்கள் உறவினர் யாராவது அங்கே இருக்கிறார்களா?'' என்று அன்போடு கேட்டார் அந்தப் பையனுடைய அம்மா.

ஆங்கிலமும் தமிழும் கலந்து அந்த அம்மாள் பேசியது என்னவோபோலத்தான் இருந்தது. அவர் பேசிய தமிழ்ச்சொற்களும் கூட எனக்குச் சரியாக விளங்கவில்லை. ஆனால், அவர் பேச்சில்

இருந்த கனிவு என் மனத்துக்கு இதமாக இருந்தது. ''உங்கள் உறவினர் அங்கே இருக்கிறார்களா?'' என்றல்லவா கேட்டார்.

''ஆமாம். எங்கள் உறவினர் - என்பென் பிரண்டு - அங்கே இருக்கிறான்'' என்றேன் நான் உற்சாகத்தோடு.

''பென் பிரண்டா? யார் அது?'' என்று கேட்டான் அந்தப் பையன், அவன் ஆங்கிலம் கலந்த தமிழில் பேசவில்லை. ஆங்கிலத்திலேயே பேசினான்.

நானும் ஆங்கிலத்திலேயே பதில் சொன்னேன்: 'குரும்பசிட்டியில் கே. எஸ். நடராசாவைத் தெரியுமா? அவனுக்கும் உன்வயது தான். அவனுக்கும் ஒரு தங்கை...''

நான் இப்படிச் சொன்னபோது அந்தப் பெண் அவள் அம்மாவின் முகத்தைப் பார்த்தாள்.

என் அக்கா குறுக்கிட்டு ''இரண்டு பேரும் சுமார் ஆறு மாதமாகக் கடித நண்பர்கள்'' என்றாள்.

அந்தப் பையன் எதையோ நினைத்துக்கொண்டு சும்மா நின்றான். என்னுடைய ஆர்வம் அவனுக்கும் மகிழ்ச்சி தந்திருக்கவேண்டும். அவன் அப்பாதான் பதில் சொன்னார்; ''எங்கட ஊர் யாழ்ப்பாணந்தான். ஆனால் நாங்கள் பல ஆண்டுகளாக கொழும்பிலேயே தாமதிக்கிறோம். இதுகள் பிறந்தது வளர்ந்தது எல்லாம் கொழும்பிலேதான். இதுகளுக்கு யாழ்ப்பாணத்தைப்பற்றி ஒண்டும் தெரியாது.'' ஏமாற்றமாக இருந்தாலும் அவர்களைப் பார்த்துப் பேசியது எனக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது.

அதன் பிறகு உன்னை நினைக்கும் போதெல்லாம் அந்தப் பையனைப்போலவே உன்னைக் கற்பனை செய்துகொள்வேன். கொழும்பிலே பிறந்து ஆங்கிலம் படித்தாலும் அவனும் யாழ்ப்பாணத் தமிழன்தானே? உன் புகைப்படத்தை அனுப்பச்சொல்லி எழுதவேண்டும்என்று நினைத்துக்கொண்டிருந்தேன்: நீ உங்கள் குடும்பப் படத்தையே அனுப்பிவிட்டாய்!

உருவத்தில் நீயும் அந்தப் பையனைப்போலவே இருக்கிறாய். அவனைவிட வேறுமாதிரி இருப்பதுபோலவும் தோன்றுகிறது. அவன் சிரித்த சிரிப்பு இப்போதும் எனக்கு நினைவு இருக்கிறது. உன்னைப் போலவேதான் அவனும் சிரித்தான்.

எங்கள் குடும்பப் புகைப்படத்தை இத்துடன் அனுப்பிவைக்கிறேன். இதை எடுக்கவேண்டியிருந்ததால் உடனே பதில் எழுத முடியவில்லை. ஒரு மாதத்துக்கு முன்புதான் நாங்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு புகைப்படம் எடுத்துக்கொண்டோம். ஆனாலும் உனக்குப் புதிதாக எடுத்தே அனுப்பவேண்டும் என்றேன். அப்பாவுக்கும்

அம்மாவுக்கும் ஒரே ஆனந்தம். அக்காவுக்கோ உற்சாகம்; தலை கால் புரியவில்லை. தனக்கு மிகப் புடித்தமான சேலையை உடுத்திக் கொண்டு ஆளுக்குமுன்னுல் புறப்பட்டுவிட்டாள்.

''உன் நண்பனை ஒருமுறை இங்கே வரச்சொல்லி எழுதேன்'' என்ருர் அப்பா. ''அவன் தங்கையையும் அழைத்துக்கொண்டு வரச் சொல்'' என்ருள் அக்கா. அவன் அப்பா அம்மா மட்டும் வரக் கூடாதா?'' என்ருர் அம்மா சிரித்துக்கொண்டே. ''எல்லோரும் தான் வரப்போகிருர்கள்'' என்றேன் நான். சரிதானே? எப்போது வருகிறீர்கள்? கோடை விடுமுறையில் இங்கே கடுமையான வெயி லாக இருக்கும். ஆனுலும் நீங்கள் வந்தால் எனக்கு வெயிலே தெரியாது.

உன் கடிதத்தை நாங்கள் எல்லோரும் ஆவலோடு எதிர்பார்க்கிருேம்.

அன்புடன்,
காஞ்சித்தலைவன்

★ றப்பர் சீல்
★ பெயர் போட்டுகள்
★ பேனையில் பெயர் பதித்தல்
★ திறப்புக்கோர்வை விலாசங்கள்
★ பள்ளிக்கூட சின்னங்கள்
★ அரசியல் கட்சிச் சின்னங்கள்
★ மெழுகுசீல் ஆகியன.

குறித்த தவணையில் செய்து கொடுக்குமிடம்

எஸ்ரிஎம் இன்டஸ்றி

(பழைய பஸ் நிலையத்துக்கு அருகாமையில்)
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

# செந்தமிழ் கேட்ட தேவர்கள்

— இரசிகமணி கனக. செந்திநாதன் —

**வா**னுலகத்தில் ஒருநாள் மாபெரும் பூசை நடைபெறுகிறது. அந்தப் பூசையிலே அமிர்தம் பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஒரே ஆனந்தம். கூத்து. இவற்றையெல்லாம் லட்சியம் செய்யாமல் ஓடையொன்றின் பக்கமாய் அமர்ந்து மகாகவி சுப்பிரமணிய பாரதியார் சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறார். தேவர் இருவர் அவரை நோக்கி, ''அமிர்தம் அளிக்கிறார்கள் ஓடும் ஓடும்'' என இயம்புகிறார்கள். அவரோ மிக அலட்சியமாக, ''வள்ளுவர் இளங்கோ கம்பர் வளர்த்த செந்தமிழை உண்டோம் அதற்கு ஈடோ இந்த அமிழ்தம்'' என்று கூறிக் கம்பீரமாக வீற்றிருக்கிறார். அந்த இடத்தை எட்டியும் பார்க்கவில்லை. பாரதியாரின் சொல்லைக் கேட்டு அமிழ்தினும் மிக்க சுவைத் தமிழைக் கேட்கத் தமிழ்நாடொன்றுக்குப் புறப்படவேண்டும் என்ற ஆவல் அந்தத் தேவர் இருவருக்கும் உண்டாகின்றது. மானிட உருவில் புறப்பட்டுவிட்டார்கள். எங்கே? சுத்தத் தமிழ் வழங்கும் ஈழத்தையும் முக்கியமாக யாழ்ப்பாணத்தையும் தரிசிப்பதற்காகத்தான்.



என்னுடைய கற்பனையில் உதித்தது இந்தக் கதை என்று எண்ணினால் நிச்சயம் நீங்கள் ஏமாந்துவிட்டீர்கள் என்பதுண்மை. ஈழத்து - யாழ்ப்பாணத்து கவிஞர் ஒருவர் ''தேமதுரத் தமிழோசை'' என்ற தலைப்பில் பாடியுள்ள கவிதைக்கு - இறுக்கமான அத்திவாரம்போல இதைப் பாடிவிட்டு மேலே செல்கிறார். அத்திவாரம் நன்கு அமைந்துவிடவே அவரது கற்பனைகள் பல படியாக விரிகின்றன. நகைச்சுவையிலே கைதேர்ந்தவரான அக் கவிஞர், ''புறப்படும்போதே பூனை போந்தது குறுக்காலாங்கே சிறப்பிது சகுனமென்று அத்தேவர்கள் களிகொண்டார்கள்'' என்று அநாயாசமாக - ஒரு மின்வெட்டைப் போல - சிறிய நகைச்சுவையைக் காட்டிவிட்டு அப்பால் நகர்த்துகிறார்.

தேவர்கள் கேட்ட செந்தமிழ் - அமிழ்தத்தை விஞ்சிய அருமைத் தமிழ் - என்னவென்று கேட்கப்போகிறீர்களா? கவிஞர் காட்டுகிறார்:-

''வட்டிஸ்த மாற்றர் மச்சான் கோமதை வாவா என்று
கொட்டினார் கொழும்பிலுள்ளோர் குழைத்துப் பல்மொழியை,விட்டு
எட்டவே நடந்து சென்று எய்தினர் யாழ்ப்பா ணத்தை
மட்டிலா மகிழ்ச்சி பெற்றோர் வசுவிலே ஏறி னார்கள்''

யாழ்ப்பாணத்து வசுவிலே 'கொண்டக்ரர்' பேசுந் தமிழ். தமிழா அது? அதிலும் கிழவர் கிழவிகளோடு அவர்கள் பேசும் 'அன்புத் தமிழ்' இருக்கிறதே அதையே ஒரு காவியமாகப் பாடலாம். கவிஞர் அதை ஒரு கவிதை யிலேயே நறுக்குத் தறித்தாற்போலக் காட்டுகிறார். கொஞ் சம் அதட்டலோடு பாடிப் பாருங்கள். கவிதை இனிக்கும்.

''ஏனணை நிக்கிறாய் போய் இருஅங்கை இடம் இருக்கு
பானையும் பாயும் கொண்டு பாராளை வெளிக் கிட்டிட்டா
ஏனணை காரைக் கீரைப் பிடிச்சல்லோ இதுக ளேத்த
வேணும்இக் கிழடு கட்டை வெளிக்கிட்டாப் பெரிய பாடே''

கொழும்புத் தெருவிலும் யாழ்ப்பாணத்து 'வசு'விலும் செந்தமிழ் கேட்ட தேவர்களைக் கவிஞர் அவ்வளவோடு நிறுத்தாமல் பக்தியில் மிக்க ஆலயப் பக்கமும் காட்டு கிறார். அங்கே 'சிட்டுப்போலப் பறந்திரண்டு சின்ன மேளக் குஞ்சுகள்' ஆடும் ஆட்டத்தையும் பாடும் பாட் டையும் தேவர்கள் கண்டும் கேட்டும் மலைக்கிறார்கள். அப்பால் தமிழ்விழா ஒன்றின் தலைவர் சொற்பொழிவை யும் கேட்டுவிட்டுத் தேவர்கள் ஓட்டம்பிடிக்கிறார்கள். அவர்கள் அங்கே போய்ப் பாரதியாருக்கு என்ன கூறினார் களோ? கவிஞர் ஒன்றுமே சொல்லவில்லை. கவியரங்க மொன்றிலே பாடவந்த கவிஞர் வி. கந்தவனம் இருபத் தைந்து கவிதைகளாலே நாம் வளர்க்கும் தமிழை நகைச் சுவையாகவும் அதேநேரத்தில் சிந்திக்கும்படியாகவும் புதிய உத்திமுறையில் பாடியுள்ளார். கவியரங்கத்திலே பாடி வெற்றிபெறக் கவனிக்கவேண்டிய பல சங்கதிகளுண்டு. அதை நன்கு பயன்படுத்துபவர்தான் இலக்கிய உலகம், ஏனிந்தப் பெருமூச்சு என்ற நூல்களின் ஆசிரியராகிய கவி ஞர் வி. கந்தவனம். அவரின் வெற்றிக் கவிதைகளுள் ஒன்றுதான் 'தேமதுரத் தமிழோசை'.

# கோல்லேறு தழுவும் நல்விழா

— முல்லைத்துறைவன் —

## தைப்பொங்கல்

தமிழர்தம் தனிப்பெருந் திருநாள் தைப்பொங்கல். மருதநிலத்து உழவர், தமது பயிர் வளர்ந்து விளைவதற்கு முதற்காரணனுன சூரியனுக்கு முதலில் பொங்கலிடுகிறுர்கள். மகரக் கோட்டிலிருந்து வடக்கே திரும்பும் கதிரவனை வரவேற்றுத் தமது நன்றிக்கடனைச் செலுத்துகிறுர்கள்!

அடுத்தநாள் மாட்டுப் பொங்கல்.

பயிர் விளைவதற்கு, உழுது எருவிட்டு உழைத்துப் பாடுபட்ட மாடுகளுக்காக ஒரு பொங்கல் விழா! தமிழர்கள் என்றுமே நன்றியுள்ளவர்கள்தாம்!!

மாட்டுப் பொங்கல் விழா நாளிலே **மஞ்சிவிரட்டு, ஜல்லிக்கட்டு** என்னும் பெயர்களிலே ஒரு வீர விளையாட்டு, தமிழ்நாட்டு இளைஞர்களாலே ஆடப்படுகிறது. கட்டவிழ்த்து விடப்பட்ட காளைகளை அடக்கி வெல்வதே அது. உடலுறுதி காட்டும் ஒரு போட்டியாக இது விளங்குகிறது.

முற்காலத்தில் ஆயர்களின் தனியுரிமையுடைய விழாவாக விளங்கிவந்த **ஏறுதழுவுதல்**, இன்று, பல்வேறினத்து இளைஞரும் பங்குகொள்ளும் ஒரு வீர விழாவாக விளங்குகின்றது. தமிழ்நாட்டு ஆயரிடையே தோன்றிய இவ்விழா இப்போது உலகின் பல பாகங்களிலுமுள்ள ஆயர்களிடையேயும் வழங்கிவருகின்றது.

ஆனுல், நோக்கங்கள் அடியோடு மாறிவிட்டன. பண்டைத் தமிழகத்தில் ஏறுதழுவி வென்றே ஆயர்குல இளைஞர் தம் காதலியரை மணந்து இல்லறம் புகுவர். இந்நாளில் அங்ஙனமின்றி, இளைஞர் தம் வீரம்காட்டும் ஒரு விளையாட்டாக மட்டும் அது விளங்கக் காணலாம்.

பண்டைத் தமிழகத்து ஆயர்பாடிக்கு நம்மை அழைக்கின்றுர், **சோழன் நல்லுருத்திரனுர்.** ஆயர்பாடியிலே அன்று ஒரு விழா; **கொல்லேறு தழுவும் நல்விழா.** ஆயர்பாடியே அன்று விழாக்கோலம் பூண்டுவிட்டது.

ஆயர்கள் தம்மை அணிசெய்து கொள்கிறார்கள்; பிடவம், காந்தள், காயா முதலிய மலர்களைக் கண்ணியாகத் தொடுத்துத் தலையிலே அணிந்து கொள்கிறார்கள்; விழா நடைபெறும் இடத்துக்கு விரைகின்றார்கள். மகளிரைப் பெற்ற ஆயர்கள் தம் மகளிரோடும், அவர்க்கென விடப் பட்ட காளைகளோடும் வந்து, விழாவிற்கென அமைக்கப் பட்ட தொழுவினுள் காளைகளைக் கட்டவிழ்த்துவிட்டுத் தம் மகளிரோடும் சென்று பரண்களில் அமர்ந்து கொள் கிறார்கள்.

''தளிபெறு தண்புலத்துத் தலைப்பெயற்கு அரும்பு ஈன்று
முளிமுதல் பொதுளிய முட்புறவப் பிடவமும்
களிபட்டான் நிலையேபோல் தடவுபு துடுப்பு ஈன்று
மணிபுரை உருவின காயாவும், பிறவும்
அணிகொள மலைந்த கண்ணியர், தொகுபு உடன்
மாறெதிர்கொண்ட தம்மைந்து உடன் நிறுமார்,
சீறரும் முன்பினோன் கணிச்சிபோல் கோடுசீஇ
ஏறுதொழூஉப் புகுத்தனர் இயைபுடன் ஒருங்கு''

[தளி-மழை; புலம்-முல்லைநிலம்; தலைப்பெயல்-முதல் மழை; முளி-உலர்ந்த; முதல்-கிளை; பொதுளிய-தழைத்த களிபட்டான் - கள்ளுண்டு களித்தவன்; தடவுபு-அசைந்து ஞெலிபு-தீயைக் கடைந்து; ஞெகிழ்-அலர்ந்த; கோடல் - செங்காந்தள்; மணி-நீலமணி; புரை-ஒக்கும்; தொகுபு- கூடி; மைந்து-வலிமை; நிறுமார்- நிலைநிறுத்தற்பொருட்டு; முன்பினோன் - வலிமையுடைய சிவன்; கணிச்சி-குந்தாலிப் படை; கோடு-கொம்பு, தொழூஉ-தொழு-தொழுவம்.]

விழாக் காண்போரும் அதிற் பங்குகொள்வோருமாக எல்லோரும் வந்துவிட்டனர். குறிப்பிட்ட சிலர், தொழு வத்தைச் சுற்றிவந்து பறையொலி எழுப்பினர். அங்கு இடப்பட்ட நறும்புகையின் மணமும் வெகுண்டெழுந்த காளைகள் பாய்ந்து திரிதலால் எழுந்த தூசியும் எங்கும் நிறைந்தன. காளைகளை அடக்கி வென்று காதலியர் கரம் பற்றவிருக்கும் காளையர்கள் கடவுளரை வணங்கித் தொழு வினுள் புகுந்தனர்.

"அவ்வழி, முழக்கென, இடியென முன்சமத்து ஆர்ப்ப
வழக்குமாறு கொண்டு வருபு வருபு ஈண்டி
நறையொடு துகள்எழ, நல்லவர் அணி நிற்பத்
துறையும், ஆலமும், தொல்வலி மரா அமும்
முறையுளி பரா அய்ப் பாய்ந்தனர் தொழூஉ"

[அந்நிலையில் முரசு முழங்கினாற்போலவும், இடி இடித்தாற்போலவும் பேரொலி எழுமாறு பறைகளைக் கொட்ட; நறை-மணப்புகை; நல்லவர்-ஆயர்மகளிர்: துறை -நீர்த் துறை; ஆலம்-ஆலமரம்; மராஅம்-மராமரம்; முறையுளி-முறையாக; பராஅய்-பரவி-வணங்கி.]

பட்டுப்புழுப்போலும் கருஞ்சிவப்புக் காளைமுன் சென்றான் ஓர் இளைஞன். அதன் வெஞ்சினப் பார்வைக்கஞ்சாது அதன்மேற் பாய்ந்தான் அவன். அக் காளை, தன்மேற் பாய்ந்த இளைஞனைக் கோட்டினாற் குத்தித் தூக்கி அலைக் கழித்தது.

"மேற்பாட்டு உலண்டின் நிறன்ஒக்கும் புன்குருக்கண்
நோக்கு அஞ்சான், பாய்ந்த பொதுவனைச் சாக்குத்திக்
கோட்டிடைக் கொண்டு குலைப்பதன் தோற்றம் காண்"

[உலண்டு-பட்டுப்புழு; புன்குருக்கண்-புல்லியநிறத்தைக் கொண்ட; பொதுவன்-ஆயர் மகன்.]

மலர்மாலை அணிந்துவந்த இன்னோர் இளைஞன், திங்கள் போலும் நெற்றிச் சுட்டியுடைய கருநிறக் காளையை எதிர்த்தான். அக் கருநிறக் காளை, தன்முன் வந்தவனது குடரைக் குத்திச் சரித்தது:

"சுடர் விரிந் தன்ன சுரிநெற்றிக் காரி
விடரிஅம் கண்ணிப் பொதுவனைச் சாடிக்
குடர்சொரியக் குத்திக் குலைப்பதன் தோற்றம்காண்"

[சுடர்-திங்கள்; சுரி-சுட்டி; காரி-கரிய எருது; விடரி அம்கண்ணி - மலைப் பிளப்பில் மலர்ந்த மலர் கொண்டு தொடுத்த அழகிய தலை மாலை.]

இன்னொரு காளை அங்கே ஆர்க்கின்றது. இடையிடையே நுண்ணிய செந்நிறப் புள்ளிகள்கொண்ட வெண்ணிறக் காளை அது. அதனைக்கண்டு அஞ்சாது அதன்மீது பாய்ந்தான் ஓர் ஆயன். அஃதவனைக் கீழே விழுத்தித் தன் கூரிய கோட்டாற் குத்திக் குலைத்தது:

''செவிமறை நேர்மின்னு நுண்பொறி வெள்ளைக்
கதன் அஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாடி
நுதிநுனை கோட்டால் குலைப்பதன் தோற்றம்காண்''

ஆயர்பாடித் தலைவன் மகளைக் காதலித்த இளைஞன் எழுந்தான். அம் மகளுக்குரிய காளைமுன் சென்றான். காளையின் கழுத்தும் தன் கழுத்தும் ஒரு சேரப் பொருந்துமாறு அதன்மீது பாய்ந்து கழுத்தை இறுக்கிக் காளையின் ஆற்றலை ஒடுக்கினான். நிலை குலைந்தது காளை. உடனே அதன் இமில் மீது பாய்ந்து அதனைக் கீழே வீழ்த்தி, வெற்றிப்பெருமிதம் விளங்கத் தலை நிமிர்ந்து நின்றான்.

''....மலர்மலி புகல்எழ அலர்மலிர் மணிபுரை நிமிர்தோள் பிணை இ
எருத்தொடு இமிலிடைத் தோன்றினன் தோன்றி
வருத்தினான் மன்ற அவ் வேறு''

[மலர்மலி-பெருகிஎழுந்த; புகல்எழ-காதல்மிக்கதால்; அலர்மலிர்-பூமாலை நிறைந்த; எருத்தோடு - எருதின்கழுத்தோடு; இமில்-ஏரி]

**கொல்லேறு தழுவும் நல்விழா** ஒருவாறு முடிவுற்றது.

இவையும் இவைபோன்ற எத்தனையோ இனிய நிகழ்ச்சிகளும் மலிந்தது கற்றறிந்தார் ஏத்தும் **கலித்தொகை. முல்லைக்கலியிலே** எமை மெல்ல அழைத்துச்சென்ற புலவர் பெருமான் சோழன் நல்லுருத்திரனுக்கு நன்றி கூறி விடை பெறுவோமா?


தம்பிகளே! தங்கைகளே!

"நீலமலர்"

**கா. தமிழ்த்தம்பி எழுதும் இனிய தொடர்நவீனம்!**
**திடுக்கிடும் நிகழ்சிகடளங்கிய சிறந்த படைப்பு!!**

**வெற்றிமணியில்**
விரைவில் தொடங்குகிறது.

☞ உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.

— ஆசிரியர்

# பாலைவன நிலவு

கா. தமிழ்த்தம்பி

நல்லோரின் உள்ளத்தைப் போல் உயர்ந்தோங்கியுள்ள மணிக்கூண்டினின்று ஒளி பிறந்தது!

மாலை நேரம்.

தென்றல் தவழ்ந்தது.

அதோ வானுற ஓங்கி
நிற்கின்றதே.

அதுதான் —
தேவலோக மணமகன்!

ஆம். இசுலாமிய ஆட்சியை உலக அரங்கிலேயே வேரூன்றச் செய்தே தீருவேனென்று அலைகடலென ஆரம்பித்த மன்னன் முகமதுவினால் எழுப்பப்பெற்ற எழில் மாடம் — தொழுகைக் கூடம்! உலக எழிலெல்லாம் ஒருங்கே திரண்டாற்போன்றதோர் ஒப்பற்ற மசூதி!

இயற்கை வனப்புமிகும் ஆப்கானிஸ்தானத்தின் அழகுத் தலைநகராம் கஜினியில் காண்போரின் கருத்தைக் கவரும் அழகு மாடம் தான் தேவலோக மணமகன்.

மனைவியின் நினைவுக்குரிய தாஜ்மஹாலைவிட மகேசனுக்குரிய மசூதியான தேவலோக மணமகனையே வரலாறு அதிகம் சிறப்பாகக் கூறுகின்றது.

தொழுகை நேரம் —

மன்னன் முகமது தன் இருக்கையை விட்டெழுந்தான். தன் தலையிலிருந்த இரத்தினக் கிரீடத்தைக் கழற்றினான்.

மசூதியை நோக்கி பயபக்தியுடன் நடந்தான். விண்ணியற் கலைஞன் ஆல்பெருனியும் ஷாநாமாவைப் படைத்ததால் சிறப்புற்ற பிர்தௌசியும் கூடவே சென்றனர்.

மசூதியையடைந்ததும் மன்னனுக்குச் சலாம் செய்துவிட்டு அப்பால் ஒதுங்கினர்.

முகமது தொழுகை மண்டபத்திற்குள் சென்றான்.

''பிர்தௌசி'' எங்கோ விரைந்து சென்றான்.

விரிந்து கிடக்கும் விண்ணை நோக்கினான் ஆல்பெருனி.

எண்ணற்ற நட்சத்திர மலர்கள் பூத்துக்கிடந்தன வானத்திலே.

களிப்பின் உறைவிடமான கஜினியை ஏறிட்டுப் பார்த்தான்

நூற்றுக்கணக்கான அடி உயரமுள்ள தேவலோக மணமகனிலிருந்து காணும்போதும் கஜினியின் அழகு குறையவில்லை.

பல கலைகளையும் கற்பித்திடும் பல்கலைக் கழகக் கட்டிடங்கள் - உலகத்து உயர்ந்தோர் உள்ளங்களையெல்லாம் நூல்களாக்கி வைத்திருக்கும் நூலகங்கள் - எங்கும் எழில் மாடங்கள் - விந்தைப் பொருள்களையெலாம் மந்தையெனக் குவித்து வைத்துள்ள பொருட்காட்சிசாலைகள், சோலைகள், நீண்ட அழகிய தெருக்கள்

இன்னோரன்ன சிறப்புக்களையெல்லாம் பெற்றுத் திகழ்ந்தது கஜினி நகரம்.

நகரெங்கும் ஒரே ஒளி வெள்ளம். ஆல்பெருனியின் உள்ளத்திலோ ஒரே அந்தகார இருள்.

இனம் தெரியாத புயல்!

''பாவத்தின் சின்னம் இப்பாழும் கஜினி!''

ஆல்பெருனியின் உதடுகள் முணுமுணுத்தன.

ஆம்!

கொள்ளையடித்துக் குவித்திட்ட பொருள்களைக்கொண்டுதான் அந்நகரை உருவாக்கினான் மன்னன் முகமது.

ஆல்பெருனியின் கண்களிலே ஒரே கலக்கம்!

வேதனை!

— — — —

தொழுகை முடிந்தது —

கண் விழித்தான் மன்னன்.

எதிரே தெரிந்த வைரக்கல்லின் ஒளி — காலாக்கினியாகத் தோன்றியது!

அந்த வைரம்-

சோமநாதபுரம் ஆலயத்திலிருந்த வைரம்!

இரும்பு நெஞ்சங் கொண்ட மன்னன் முகமதுவின் இதயம் ஏனோ சலனமடைந்தது.

முகமெலாம் வியர்வைத்துளிகள்!

உறங்கிக் கிடந்த உள்ளுணர்வு பேசத் தொடங்கியது! அவனுள்ளமோ வெடி மருந்துச்சாலையானது.

''கொலை வெறியும் கொள்ளையுமே இரு கண்களாகப்பெற்ற உனக்கு வழிபாடும் ஒரு கேடா? சாத்தானு வேதம் ஓதுவது? ஊரார் உடமைகளையெல்லாம் வாரிக்கொண்டு வந்து இந்த வடிவழகுக் கட்டிடத்தை ஆண்டவனுக்காகக் கட்டியிருக்கிறாயே, உனக்கு வெட்கமாக - இல்லை? இது வீரமல்ல! உன் வெறிக்குக் கிடைத்த கூலி! அறநெறியை அழித்துவிட்டு பாதி நிலாவைப் பரம பிதாவாகக் கொண்டாடுகிறாயே, உன் நடிப்பு கேவலமான தேயாகும். சரித்திரம் உன்னைக் காறியுமிழத்தான் போகின்றது. விழியற்ற உனக்கேன் விளக்கொளி? பட்ட மரத்திற்கெதற்கு நீர்? பாலை வனத்திலே நிலவொளிப்பதால் பயனேது.''

ஆமையாய் — ஊமையாய் அடங்கிக் கிடந்த முகமதுவின் மனச்சாட்சி எரி மலையாகக் குமுறியது!

எல்லாம் ஒரு கணம்தான் —

ஒரே சமாதி நிலை —

கனத்த நெஞ்சுடன் கஜினி முகமது கீழேயிறங்கிவந்துகொண்டிருந்தான்.

அடுத்தகணம் —

மன்னனின் கால் இடறியது!

அவ்வளவுதான் —

''ஓ அல்லா''

இறுதிக் குரல் தேய்ந்து எதிரொலிக்கமன்னனின் உடல் உச்சியினின்று கீழே உருண்டோடி மறைந்தது!

தொடர்ந்து இடி விழுந்தாற் போன்ற ஒலி! ''தேவலோக மணமகன்'' 'படா' - ரென்று வெடித்துச் சிதறியது.

கஜினியோ நெருப்பால் அழிந்து கொண்டிருந்தது.

ஒரே ஓலக் குரல்!

அழிவின் அவலம் எதிரொலித்தது!

ஆனால் -

ஒரே ஒரு உள்ளம் மட்டும் நிறை மனத்துடன் இருளில் தொலைவில் எங்கோ நின்று கொண்டிருந்தது.

அந்த உருவம் -

ஆல்பெருனி!

ஒரு நல்ல செயலைச் செய்து முடித்தோமென்ற உள நிறைவுடன் ஆல்பெருனி புன்னகை செய்தான்!

★★


சக்தி அச்சகம்

★ தமிழ் ★ ஆங்கிலம் ★ சிங்களம்

— ஆகிய மும்மொழிகளிலும் —

✳ குறித்த நேரத்தில் ✳ குறைந்த செலவில்

✳ சிறந்த முறையில்

உங்கள்

அச்சு வேலைகள்

செய்துகொடுக்கப்படும்.

பாடசாலைப்புத்தகங்களும், மற்றும் உபகரணங்களும்

சகாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

சக்தி புத்தகசாலை

தண்ணீரூற்று — முள்ளியவளை




## தைத் திருநாள்

— காரை. செ. சுந்தரம்பிள்ளை —

தைத்திரு நாளும் பிறந்ததம்மா - எமைச்
சார்ந்த கலியுந் தொலைந்ததம்மா
எத்திசை யுஞ்செழிப் புற்றதம்மா - எம
தின்னல்கள் யாவும் மறைந்ததம்மா.

செந்நெல் மணிகள் மலையாச்சு - பல
செல்வம் திரண்டு புகழாச்சு
கன்னல் விளைந்தொரு காடாச்சு - நல்ல
காய்கறித் தோட்ட முருவாச்சு.

பொய்யுங் களவும் ஒழிந்தாச்சு - தீய
புன்மையும் பூசலும் போயாச்சு
செய்யுஞ் செயல்கள் சிறந்தாச்சு - எங்கள்
சிந்தனை யாவும் உயர்ந்தாச்சு.

வஞ்சகம் சூதும் மறைந்ததம்மா - பொருள்
வெளவும் இழிகுணம் போனதம்மா
நஞ்சர்கள் எண்ணம் அழிந்ததம்மா - இந்த
நாட்டில் சமரசம் பூத்ததம்மா.

மாவிலை தோரணம் தூக்கிடுவோம் - தூய
மஞ்சளும் இஞ்சியும் கட்டிடுவோம்
ஆவின் பசும்பாலைப் பெய்திடுவோம் - பொங்கல்
ஆக்கிப் படைத்து மகிழ்ந்திடுவோம்.

செங்கதி ரோன்புகழ் வாழ்த்திடுவோம் - அவன்
சேவையை நித்தமும் போற்றிடுவோம்
சங்கெடுத் தூதி மகிழ்ந்திடுவோம் - நல்ல
தைத்திரு நாளைக்கொண் டாடிடுவோம்!

# பொங்குக பொங்கல்

— கவிஞர் அமலன் —
காந்திநகர், திருச்சிமாவட்டம்,

இன்பப் பொங்கல்
அன்புப் பொங்கல்
எங்கும் பொங்கிடவே-புகழ்
எங்கும் தங்கிடவே
பொங்குக பொங்கல்
புதுமைப் பொங்கல்
நமது வீடுகளில் !

கரும்பின் சாறும்
கழனிப் பயிரும்
கலந்திடும் பொங்கலிலே - சுவை
விளைத்திடும் பொங்கலிலே
பொங்குக பொங்கல்
புதுமைப் பொங்கல்
நமது வீடுகளில்!

பாலும் பழமும்
பாகும் பருப்பும்
வாசலில் வந்திடவே - நல்ல
வாசமும் வந்திடுதே...
பொங்குக பொர்ங்கல்
புதுமைப் பொங்கல்
நமது வீடுகளில் !

மங்கல மாகிடும்
மஞ்சள் குங்குமம்
எல்லாம் பொங்கலிலே - இங்கு
எல்லாம் பொங்கிடுதே...
பொங்குக பொங்கல்
புதுமைப் பொங்கல்
நமது வீடுகளில் !

---

# வ ள் ளு வ ர்

— அழகனார் —

உலகம் எல்லாம் போற்றிடும்
உயர்ந்த குறளை ஆக்கிய
புலவன் நமது வள்ளுவன்
புவியில் என்றும் வாழ்பவன்.

சிறுகச் சொல்லி மாபெரும்
சீலம் தன்னை விளக்கிடும்
பெருமை கொண்ட வள்ளுவன்
பேசும் மொழிகள் பொன்மொழி.

அமிழ்தம் போல எதனையும்
ஏழே சொல்லில் அடக்கியே
தமிழுக் கேற்றம் தந்தநற்
றலைவன் நமது வள்ளுவன்.

# நாவற் பழம்

— கவிஞர் வி. கந்தவனம் —

பாட்டி வீட்டுக் கோடியிலே
பழுத்தி ருக்கு நாவல்
போட்டி போட்டு ஓடிப்பழம்
பொறுக் கியுண்ண ஆவல்

கந்த சாமி மேரிசகீர்
காலை மாலை அன்பாய்
வந்து வந்து பொறுக்கிப்பழம்
வாடிக் கையாய் உண்பார்

பள்ளிக் கூடம் விட்டவுடன்
பாலன் ஓடி வந்தான்
வள்ளிப் பேத்தி வீட்டடியில்
வழுக்கி ஆ!வி ழுந்தான்

தொல்லைக் குப்பின் நல்லபயன்
தொடர்ந்து கூடும் என்றே
மெல்ல மெல்ல பாட்டிப்பழ
வீடு நோக்கிச் சென்றோம்

கொள்ளை பழம் நர்வலின்கீழ்
குவிந் திருக்கக் கண்டோம்
நல்ல வற்றை ஔவையைப்போல்
நன்கு ஊதி உண்டோம்.

# பொம்மை

த. சரஸ்வதிதேவி

சின்னச் சின்னப் பொம்மை — மலர்ச்
சிங்காரப் பொம்மை
வண்ண வண்ணப் பொம்மை — எங்கள்
மனதுக்கேற்ற பொம்மை

சட்டை போட்ட பொம்மை — பசி
தாகமற்ற பொம்மை
வட்டக் கண்ணைக் காட்டி — மன
வாட்டந் தீர்க்கும் பொம்மை

என்னைப் போன்ற பொம்மை — நான்
எடுத்துக் கொஞ்சும் பொம்மை
பொன்னும் பொருளும் வேண்டாம் — இந்தப்
பொம்மை ஒன்றே போதும்.

# நலமா?

மருத்துவமணி **M. P. தங்கவேலர்**

*அன்புச் செல்வர்களே!*

**நலமா?** இது புதுப்பகுதி. உங்கள் நலனுக்காகவே இப் பகுதி தொடங்கப்படுகிறது. ''நோயற்ற வாழ்வே குறை வற்ற செல்வம்'' என்பதை அறிவீர்கள். தசைக்கூடான நமது தேகமெனும் இருட் குகையினுள் உயிரெனும் அகல் விளக்கு ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. அதை அணையாது பாதுகாப்பதே அறிவுடைமையாகும்.

இப்பகுதிக்கு உங்கள் வினாக்களை 10சத இந்தியா தபாலட்டையில் எழுதி அனுப்பலாம். ''வெற்றிமணி'' ஒவ்வொரு இதழிலும் பதில் கூறுவேன்.

இவ்விதழில் பொதுவான நலக்குறிப்புகளை மட்டுமே கொடுத்துள்ளேன். அவற்றின்படி நடந்து சிறப்படைவீர்க ளாக!

அடுத்த இதழில் சந்திப்போம்.

பழநி
25-12-68.

தங்கள் அன்புள்ள,
**M. P. தங்கவேலர்**

உங்கள் வினாக்களை அனுப்பவேண்டிய முகவரி:-
மருத்துவமணி **M. P. தங்கவேலர்**
யாகோப்பு மருத்துவ நிலையம்,
இரேயில்வே பீடர் ரோடு,
பழநி - மதுரை மாவட்டம்.
தமிழ்நாடு

## நல்வாழ்வுக் குறிப்புக்கள்

1. அதிகாலையில் எழுந்ததும் கிழக்குநோக்கியமர்ந்து சிறிது நேரம் இறைவனைத் தொழவேண்டும். அதனால் மன அமைதியும் திட மும் வலுப்படும்.
2. காலை - மாலை அவசியம் மலக் கழிவு செய்யவேண்டும்.
3. தினமும் காலையில் குளிர்ந்த நீரிலேயே குளிக்கவேண்டும். 'சந் தண சோப்பு பயன்படுத்தலாம். உலர்ந்த ஆடையால் துவட்டு வது நலம். வாரமொருமுறை எண்ணெய் தேய்த்துக் குளி.
4. நல்ல பற்பொடிகளையே பல்துலக்கப் பயன்படுத்தவேண்டும். சாம்பல், செங்கல் இவற்றை எண்ணவே கூடாது.

5. சுத்தமான தேங்காய் எண்ணெய் அல்லது எள் எண்ணெய்தான் தலைக்கு நல்லது. வாசனை எண்ணெய் தடவலாகாது. சீப்பு சுத்தமாக இருக்கவேண்டும்.

6. உணவருந்தும்போது உரையாடல் செய்வதும், வேகமாக உட்கொள்வதும் தவறு. ஆசாரமாக அமர்ந்து உண்க. ஈ மொய்த்தவற்றைத் தொடவே கூடாது.

7. குவளையில் நீர் எடுக்கும்போது விரல்கள் நீரில் படலாகாது. நகங்களைக் கடிப்பது அறிவீனமான செயல். அதனுல் ஒழுங்காக வெட்டிக்கொள். குவளை உதட்டில் படாமலேயே நீரைக் குடிக்கவேண்டும்.

8. காப்பி - டீ இவ்விரண்டும் கலிகால எமன்கள்! புகைப்பொருள்களை எண்ணவே கூடாது.

9. பாலும், பால் பொருள்களும், பழங்கள், காய்கறிகள், கீரைகள், தானியங்கள், கிழங்குகள் இவையே அறிவை வளர்க்கும் மிகச்சிறந்த உணவுப் பொருள்களாகும். முட்டை, மாமிசம் போன்றவை வெறி உணவுகளாகும்.

10. இரவு உணவு சற்றுக் குறைவாக இருக்கவேண்டும். புளிப்பும் காரமும் அதிகம் கூடாது. உப்பும் குறைத்தே பயன்படுத்துதல் நலம்.

11. கோபத்தால் நரம்புத் தளர்ச்சி அதிகமாகின்றது; புத்தியும் கெடுகின்றது. அதனுல் அதற்குக்கூடியவரை இடம்தராதே. யாவரிடமும் அன்பும், கருணையும் கொள்.

12. திரைப்படங்களை அடிக்கடி பார்க்கக்கூடாது. அதனுல் கண்களும் மனமும் கெடுகின்றன. திரைப்பட விமரிசனம் செய்தலைவது மிகவும் மட்டமான செயல். எப்போதாவது திரைப்படம் பார்க்கச் செல்வதாயின் பகல் காட்சிக்கோ இரண்டாவது காட்சிக்கோ செல்லக்கூடாது. சதா திரைப்பாடல்களை முணுமுணுப்பது அநாகரிகமான செயலாகும். தியேட்டர்களில் விற்பனையாகும் சிற்றுண்டிகளை உண்ணக்கூடாது.

13. இறைவன் புகழ்பாடும் பாடல்களையே உன் செவிகள் ஏற்க வேண்டும். அதனுல் உள்ளம் ஒளிபெறுகின்றது.

14. எதிர்பாராமல் உணவுக் கடைகளுக்குச் செல்ல நேரிட்டால் தட்டிலோ, கரண்டியிலோ உண்பது தவறு. இலையையே பயன்படுத்த வேண்டும்.

15. நடந்துகொண்டே எதையும் உண்ணக்கூடாது.

16. எச்சிலை அடிக்கடி - கண்ட இடங்களில் உமிழக்கூடாது.

17. மிதியடி மிகவும் அவசியமாகும்.

18. வடக்கே தலை வைத்துப் படுக்கவேண்டாம். அதனால் வறுமையும், நோயும் வளரும். ஆண்கள் இடதுபக்கமும், பெண்கள் வலது பக்கமும் படுத்துறங்குதல் நல்லது.

19. உறக்கம் இறைவன் நமக்களித்த செல்வம். அதனால் இரவில் நன்றாக ஓய்வு கொள்ளவேண்டும்.

20. இயற்கை வைத்தியமே சிறந்தது. கண்ட மருந்துகளையெல்லாம் சாப்பிடக்கூடாது.

21. சந்தேகமின்றி - அச்சமகற்றி - நல்லெண்ணம், நல்ல நூல்கள், நல்லோர் கூட்டுறவு - யாவற்றிற்கு மேலாக இறைவனைப் பற்றிய எண்ணம் இவையே நாம் உயர்ந்து வாழ வழி காட்டிடும் கலங்கரை விளக்காகும்.

★


நங்கையர் விரும்பும் நவநாகரீக

★ நகைகளுக்கும் வைரங்களுக்கும் ★

புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்

# கே. என். எம். மீரான் சாஹிப்

"தங்கப்பவுண் நகை மாளிகை"

**கன்னாதிட்டி** தொலைபேசி: 585 **யாழ்ப்பாணம்**

*Visit*

## K. N. M. MEERAN SAHIB

JEWELLERS & DIAMOND MERCHANT

"SOVEREIGN PALACE"

**KANNATHIDDY** *Dial:* 585 **JAFFNA**

# உங்கள் அறிவுக்கு

கு. துரைநாயகம்
வித்தியானந்தக் கல்லூரி, முள்ளியவளை.

வினாக்கள்:

1. ஆசியாவில் பிறந்து, ஆபிரிக்காவில் இறந்து, ஐரோப்பாவில் அடக்கம் செய்யப்பட்ட உலகப் பிரமுகர் யார்?
2. சந்திரனில் இருந்து பூமியைப் பார்த்தால் எப்படியிருக்கும்?
3. அண்ட வெளியில் காணப்படும் மிகப் பெரிய கிரகம் யாது?
4. எக் குருதியினம் எல்லோருடைய குருதியுடனும் பொருந்தக் கூடியது?
5. மருத்துவத்தின் தந்தை யார்? எந்நாட்டைச் சேர்ந்தவர்?
6. தம் கண்ணுல் பார்ப்பது மட்டுமல்லாமல் கேட்கவும் ஆற்றல் பெற்றுள்ள அதிசயப் பிராணி எது?
7. இலங்கையில் இல்மனைற்றுத் தொழிற்சாலை எங்கே உண்டு?
8. உலக அதிசயங்களுள் ஒன்ருகக் கருதப்படும் தொங்கு தோட்டம் எங்கு உள்ளது?
9. அணுக்குண்டு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் கதிர்தொழிற்பாடுடைய மூலகம் யாது?
10. இலங்கையைக் கடைசியாக ஆட்சிசெய்த ஆங்கிலத்தேசாதிபதி யார்?
11. இலங்கையில் பாவனையில் இருந்துவரும் பண நோட்டுகள் யாவும் எந்த நாட்டில் யாரால் அச்சிடப்படுகின்றன?
12. பூமிக்கு அண்மையிலுள்ள பிரகாசமான கோள் எது?

**விடைகள்:-**

1. மகா அலெக்சாந்தர்
2. பெரிதாகவும், மிகவும் பிரகாசமுடையதாகவும் இருக்கும்
3. வியாழன்
4. குருதியினம் "O"
5. கிப்போ கிருட்ஸ்; கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர்
6. ஆமை
7. புல்மோட்டையில்
8. பாபிலோனியாவில்
9. யூரேனியம்
10. சேர் ஹென்றிமூர்
11. இங்கிலாந்திலுள்ள பிராட்பரி வில்க்கன் சன் ஸ்தாபனத்தாரால்
12. சுக்கிரன்

## சுன்னுகம்: வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

# பாடசாலைப் புத்தகங்கள்

| | |
|---|---|
| அரிவரி பாலபோதினி | 60 |
| தமிழ் நெடுங் கணக்கு | 25 |
| தரம் 1 பாலபோதினி | 60 |
| தரம் 2 பாலபோதினி | 70 |
| சைவசமய போதினி | 70 |
| சுகாதார போதினி | 90 |
| நாமும் நமது சூழலும் | 1-50 |
| மொழிப்பயிற்சி I | 60 |
| பரதன் (உபபாடம்) | 50 |
| தரம் 3 பாலபோதினி | 80 |
| சைவசமய போதினி | 80 |
| சுகாதார போதினி | 90 |
| நாமும் நமது சூழலும் | 1-75 |
| மொழிப்பயிற்சி II | 90 |
| இலக்கிய மஞ்சரி | 70 |
| இராஜா தேசிங்கு (உ. பா.) | 60 |
| தரம் 4 பாலபோதினி | 90 |
| சைவசமய போதினி | 90 |
| சுகாதார போதினி | 1-25 |
| நாமும் நமது சூழலும் | 2-00 |
| மொழிப்பயிற்சி III | 1-00 |
| இலக்கிய மஞ்சரி | 80 |
| தமயந்தி (உபபாடம்) | 60 |
| தரம் 5 பாலபோதினி | 1-00 |
| சைவசமய போதினி | 1-00 |
| சுகாதார போதினி | 1-50 |
| விவசாய போதினி | 1-00 |
| நாமும் நமது சூழலும் | 2-50 |
| English Composition for Beginners | 80 |
| மொழிப்பயிற்சி IV | 1-10 |
| இலக்கிய மஞ்சரி | 90 |
| சந்திரமதி (உபபாடம்) | 75 |
| இராமாயணச் சுருக்கம் ,, | 60 |
| தரம் 6 பாலபோதினி | 1-10 |
| சைவசமய போதினி | 1-25 |
| பொதுவிஞ்ஞான ,, | 3-00 |
| சுகாதார போதினி | 2-00 |
| விவசாய போதினி | 2-50 |
| புவியியல் படவே-பயிற்சி | 1-25 |
| கட்டுரை மஞ்சரி | 1-50 |
| சரித்திரச் சுருக்கம் | 2-25 |
| மொழிப்பயிற்சி V | 1-20 |
| இலக்கிய மஞ்சரி | 1-10 |
| மணிமேகலை (உபபாடம்) | 1-00 |
| குசேலர் சரித்திரம் உ. பா. | 60 |
| தமிழ் மஞ்சரி I | 1-10 |
| தரம் 7 பாலபோதினி | 1-20 |
| சைவசமய போதினி | |
| பொதுவிஞ்ஞான ,, | 3-50 |
| சுகாதார போதினி | 2-00 |
| புவியியல் படவே-பயிற்சி | 1-50 |
| மொழிப் பயிற்சி VI | 2-75 |
| இலக்கிய மஞ்சரி | 1-30 |
| சாவித்திரி (உபபாடம்) | 75 |
| குகன் | 1-00 |
| தமிழ் மஞ்சரி II | 1-20 |
| தரம் 8 சகுந்தலை | 1-25 |
| திருமாவளவன் | 1-25 |
| மொழிப்பயிற்சி VI | 1-75 |
| பொதுவிஞ்ஞான போதினி | 4-00 |
| புவியியல் | 4-00 |
| புவியியற் படவே-பயிற்சி | 2-25 |
| சுகாதார போதினி | 2-50 |
| சைவசமய பாடத் தொகுப்பு | 1-75 |
| இலங்கைச் சரித்திர வினவிடை | 1-50 |
| விவசாய போதினி | 3-50 |
| கணக்குப் பதிவு நூல் | 4-00 |
| English Composition for Juniors | 1-50 |
| **G. C. E.** மொழிப்பயிற்சி | 2-50 |
| கட்டுரை மஞ்சரி | 3-00 |
| ஆட்சி இயல் | 6-00 |
| A Guide to Translation- Parts I & II | 4-00 |
| சுகாதார போதினி I | 3-50 |
| ,, ,, II | 4-50 |
| சுகாதார வினவிடை | 2-75 |
| இந்துசமய வினவிடை | 1-75 |
| இலக்கிய வினவிடை | 2-50 |
| உயர்தர கணக்குப் பதிவு நூல் | 5-50 |
| இக்கால வாணிப முறை | 6-50 |

ஆருந்தரப் பயிற்சிகள்
1 ஆம் பருவம், 2 ஆம் பருவம்
3 ஆம் பருவம்
(எல்லாப் பாடங்களுக்கும்)

எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஏகவிற்பனையாளர்: **சுன்னுகம், தனலக்குமி புத்தகசாலை.**

இலங்கையில் செய்திப்பத்திரிகையாகப்பதிவுசெய்யப்பட்டதுQ.B 1338

**QUALIFIED OPTICIANS**

*Visit*

# MOHANLAL. C. VASA

No. 207, Second Cross Street,
**COLOMBO. 11.**

*Telegrams:* **VASAOPTICO** *Telephone:* **2931**

---

கண்களுக்குத் தேவையான

**சகலவிதமான கண்ணாடிகளுக்கும்**

**எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்**


# மோகன்லால் C. வாசா

இல. 207, இரண்டாங்குறுக்குத் தெரு,

**கொழும்பு. 11.**

தொலைபேசி: **2931**

இப்பத்திரிகை சக்தி அச்சகத்தினருக்காக, பொ. இராசரத்தினம் அவர்களால் முள்ளியவளை தண்ணீரூற்றிலுள்ள சக்தி அச்சகத்தில் 15-1-69 புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.



"சிறந்த"
ரபர்சீல்
புகைப்படம்
புளொக்ஸ்
BLOCKS
தயாரிப்பாளர்
கொழும்பு ஸ்ரூடியோ
PHONE
410